சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 8	இதழ்: 3	ஆகஸ்ட் - 2026	விலை - ரூ.20/-
VOL: 8	ISSUE: 3	AUGUST - 2026	Rs. 20/-



யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் எழுதிய

"மௌனத்தின் மூலம் தவம்"




பிறந்தநாள், திருமணப்பரிசாக
அளிக்கக்கூடிய சிறந்த நூல்

புத்தகம் தேவைப்படுவோர்
தொடர்பு கொள்ளவும்

விலை: ரூ.100/-
(தபால் செலவு உட்பட)

தொடர்புக்கு: 9941816692.


SAI DHYANALAYA



தமிழ் புத்தகம்
விலை 400/-
(தபால் செலவு உட்பட)

யோகி ஸ்ரீராம் பாபா
அவர்கள் எழுதிய அற்புதமான
ஆன்மீக அனுபவத் தேடல்கள் நிறைந்த
"குருவைத்தேடி"
நூல் தமிழிலும், ஆங்கிலத்திலும்
விற்பனையில் உள்ளது.

"குருவைத்தேடி" புத்தகம்
வாங்குவோறுக்குசகல
தோஷங்களையும் போக்கும்
ரூ.1000 மதிப்புள்ள
"சாயி தாயத்து"
இலவசமாக
அனுப்பிவைக்கப்படும்.



ஆங்கில புத்தகம்
விலை 250/-
(தபால் செலவு உட்பட)

SAI DHYANALAYA

G- PAY NO: 9941816692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-8 மலர்-3 ஆகஸ்ட்-2026

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

எமது இறைவன்
ஸ்ரீ சாய்நாதர்
எமது சமயம்
சாய் சமயம்
எமது மந்திரம்
ஓம் ஸ்ரீ சாய்ராம்
எமது வேதம்
சாய் சத்சரிதம்
எமது புனித பூமி
சீரடி
எமது கொள்கை
எல்லாம் சாயி
எல்லாமே சாயி!

இதழ் வடிவமைப்பு
ஜெ.செந்தில்குமாரி

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு, அயனாவரம்,
சென்னை - 600023.
செல்: 99418 16692, 88258 31068

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி

அன்புக் குழந்தையே....

நீ என்னை கடவுள் என்று முழுமையாக நம்பித்தானே என்னிடம் வந்திருக்கிறாய்! அப்புறம் என்ன? என்னிடம் வந்த உடனேயே உனது லௌகீக தேவைகளை கொட்டித் தீர்க்கின்றாய்? அப்படியானால் உன் தேவைகள் என்னவென்று எனக்கு தெரியாதா? ஏன் எல்லாவற்றையும் என்னிடம் புலம்பிக் கொட்டுகிறாய்?

உன் தேவை என்ன என்பதை நான் அறிவேனா இல்லையா? பிறகு எதற்கு கண்மூடித்தனமான பிரார்த்தனை.

வியாழக்கிழமை விரதம் என்கிறாய்! ஒன்பது நாள் பூஜை என்கிறாய்! என்னை நம்பியவர்களுக்கு ஆறு வித சாஸ்திர சம்பிரதாயங்களும் தேவை இல்லை என்று நான் கூறியதை படித்தாயா இல்லையா?

நான் கூறியதற்குப் பின்பும் சாஸ்திர, சம்பிரதாயங்களை பின்பற்றித்தான் தீருவேன் என்று அடம்பிடித்தால் எனக்கு என்ன மரியாதை. நான் கூறிய மொழிகளை நம்பாமல் தாத்யா குதிரை வண்டியில் சந்தைக்குச் சென்றபோது அவனுக்கு நடந்ததை நீ படிக்கவில்லையா?

காசிக்கு தீர்த்த யாத்திரை செல்ல வேண்டும் என்ற தாஸ்கணுவிற்கு என் பாதத்திலேயே கங்கை உள்ளது என்று காண்பித்ததுதான் உனக்கு நினைவில் லையா? இன்னும் நான் உனக்கு என்னை எப்படித்தான் நிரூபிக்க வேண்டும்.

நான் உனது தேவைகளை நிறைவேற்ற தயாராகத்தான் இருக்கின்றேன். உனக்கு அதை பெறுவதற்கான நேரம் வரவேண் டாமா? அதுவரை சற்று பொறுமையாக இரு! உனக்குண்டானது என்னிடமே இருக்கின்றது. நானே அதை உனக்குக் தருவேன்.

- பகவான் ஸ்ரீ சீரடி சாய்பாபா

ஆசிரியர் பக்கம்...

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!





பகவான் சாயிநாதரின் பேரருளால் தொண்ணூற்று ஆறாவது இதழ் மூலம் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம். சென்ற மாதத்தின் புத்தக வெளியீட்டு விழா 05.07.2026 ஞாயிற்றுக் கிழமை காலை பத்து மணிக்கு, சென்னை அயனாவரம், 2/15, போலீஸ் மாணிக்கம் தெரு, இராமலிங்க சுவாமி சத்ய சன்மார்க்க சங்கத்தில், மிகச் சிறப்பாக நடைபெற்றது.

காலை 10 மணிக்கு செல்வி. அமிர்தா, செல்வி. அட்சயா ஆகியோர் ஆத்மஞான பாடலை பாட விழா இனிதே துவங்கியது. அதைத்தொடர்ந்து ஆசிரியர் திரு. ஸ்ரீராம் பாபா அவர்களின் சத்சங்கமும் அதைத்தொடர்ந்து புத்தக வெளியீடும் நடைபெற்றது.

இம்மாத இதழை கொளத்தூர் சாயி பக்தர் திரு.ராஜா அவர்கள் வெளியிட, அம்பத்தூர் சாயி பக்தர் திரு. சத்திய மூர்த்தி அவர்கள் பெற்றுக் கொண்டு சிறப்பித்தனர். விழாவில், திருமதி. ஜெயந்தி, திருமதி. தனம், திருமதி. சுகுணா, திரு.அக்ஷ்டின் ஆகியோர் தங்களது அனுபவங்களை பக்தர்களிடையே பகிர்ந்து கொண்டனர். திரு. இராஜசேகர் அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார். அதைத் தொடர்ந்து ஆத்மஞானியர் குழுவினர் குருவிற்கு மரியாதை செய்து குரு காணிக்கை வழங்கினர்.

சாய் தினானாலயா ஆத்ம ஞான பீடத்தின் அன்னதானக் குழுவினர் வந்திருந்த பக்தர்களுக்கு அறுசுவை உணவளித்து மகிழ்ந்தனர். புத்தக வெளியீட்டு



விழா மதியம் 2 மணிக்கு இனிதே நிறைவடைந்தது.



வாழ்க்கை ஒரு சவால். சவால் இருந்தால் தானே வாழ்க்கையில் ஒரு விறுவிறுப்பு இருக்கும். ஆனால் வாழ்க்கையில் நாம் யாருக்கும் சவால் விடவேண்டியதில்லை. மாறாக நம்மை நோக்கி சவால்கள் வந்தபடியேதான் இருக்கும். அனைத்து தடைகளையும் தாண்டிச் சென்றால் தான் வெற்றிக் கோப்பையை அடைய முடியும்.

என்னால் தடைகளை தாண்ட முடியாது. வெற்றிக்கோப்பையை கொடுங்கள் என்றால் எப்படி கொடுப்பார்கள். அதைப் போன்றே வாழ்கை ஒரு விளையாட்டு. அங்கு நம் தகுதியை நிரூபிக்க சவால்களை சந்தித்தே ஆக வேண்டும். அப்போதுதான் முதுமையில்



நமது பேரப்பிள்ளைகளுடன் நாம் சந்தித்த சவால்களை பெருமையுடன் பகிர்ந்து கொள்ள முடியும்.

நாம் சந்தித்த இத்தகைய வீரச்செயல்களை பற்றி பேசுவதே மகிழ்ச்சி தரும். மாறாக பிறந்தது முதல் என் வாழ்க்கையில் சொல்லிக்கொள்ளும்படி ஏதும் நடக்கவில்லை என்றால் கேட்பவர் எழுந்து போய்விடுவார்கள் அல்லவா?

எனவே வாழ்க்கையை பரபரப்புள்ளதாக ஆக்கிக் கொள்க! ஆனால் அதை வெறும் வேடிக்கையாகக் கருதுக. நன்மைகளைப் போலவே, துன்பங்களையும் சமமாகப் பாருங்கள். ஆன்மீகத்தின் பெயரால் முகத்தில் விளக்கெண்ணை பூசியவர் போன்று இருக்காதீர்கள். முக மலர்ச்சியுடன் இருங்கள். குதூகலத்துடன் குதித்தாடுங்கள். தவறே செய்துவிட்டாலும் கூட, நான் அறியாது இதை செய்துவிட்டு நல்ல படிப்பினையைப் பெற்றேன் என்று கூறிக் கொள்ளுங்கள். உண்மையான ஆர்வம் இருந்தால் உங்களால் எதையும் வேடிக்கையாக எடுத்துக் கொள்ள முடியும்.

பகவான் சாயிநாதரின் பேரருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று உலக மாந்தர்கள் அனைவரும் இயற்கை பேரிடர், போர், பகை அச்சமின்றி ஆரோக்கியத்துடன், மன அமைதியுடனும் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கிறோம். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்! ●

புத்தக வளர்ச்சி நன்கொடை

நமது சாய் மகராஜ் குருவைத்தேடி ஆன்மீக மாத இதழ் கடந்த 95 மாதங்களாக பக்தர்களிடம் இருந்து எந்தவித எதிர்பார்ப்புமின்றி பரந்த மனம் படைத்த நல்லோர்களின் உதவியால் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது. இந்த இதழில் மூலம் பயன் பெற்றோர் ஏராளம். நம் இதழ் இன்னும் ஏராளமான நபர்களுக்குச் சென்று எல்லோரும் பயன்பெற வேண்டும் என்று கருதுகின்றோம். இந்த இதழில் வெளிவரும் செய்திகள் உங்களுக்குப் பிடித்திருந் தால், இந்த செய்திகள் அனைவருக்கும் சென்று சேர வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் தங்களால் இயன்ற காணிக்கையை புத்தக வளர்ச்சிக்கு அளித்து எங்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொன்கின்றோம்.

இம்மாதம் புத்தக வளர்ச்சி நன்கொடை அளித்தவர்கள்:

திரு. ஆறுமுகம், கொளத்தூர். ரூ.200.
திருமதி. புவனா, புலுதிவாக்கம். ரூ.200.
திரு. ராஜப்பா, சென்னை. ரூ.200.
திருமதி. கலாவதி. அயனாவரம். ரூ.200.
திரு.வேணுகோபால், நங்கநல்லூர். ரூ.100.
திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன், நங்கநல்லூர்.ரூ.100.
திரு. ரமேஷ்குமார், தஞ்சை. ரூ.100
திரு. கண்ணப்பன், குடந்தை. ரூ.100.
திரு. ராஜேஷ், திருத்தணி. ரூ.100.
திரு. கோபாலகிருஷ்ணன், குடந்தை. ரூ.100.
திருமதி. மலர்விழி, சென்னை. ரூ.100.



எனது கதைகளை உங்களது உள்ளத்தில் பதிவேற்றுங்கள். ஒவ்வொரு கதையும் தரும் குறிப்பு நுட்பத்தை நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அதனால் உங்களது மனத்தின் பதை பதைப்பு மறைந்து தொழியும். உங்களுக்கு உண்மையான சாந்தியும் அமைதியும் கிடைக்கும். எனது கதைகள் உங்களுக்கு உண்மையான வழியைக் காட்டி ஆசீர்வதிக்கும்.

சாயி சரிதம்

29

கருணையின் இருப்பிடம் சீரடி சாயிநாதர். தம்மை அண்டிய வர்களிடம் பாசமும், நேசமும் காட்டி அவருடைய தரிசனத்தினா லேயே அவர்களுக்குள்ள சம்சார வாழ்க்கையின் பயத்தினை போக்குகிறார். ஒரு மனிதனின் வாழ்க்கையில் ஞானியின் வருகைக்கு முக்கிய காரணம், 'தன்னையறிதல்' மட்டுமே! அதன் மூலமாகத்தான் இச்சம்சார பந்தத் திலிருந்து 'விடுதலை' கிட்டும்.

அடியவர்களுக்கு விடுதலை அளிப்பதில் சர்வ வல்லமை உடைய சீரடி சாயிநாதரின் பாதாரவிந்தங்களில் யாரெல்லாம் சரணாகதி அடைகிறார்களோ அவர்களின் ஆன்மீக முன்னேற்றம் நிச்சய மானது. அவரது பாதங் களே புனித சேத்திரம் என்று பிராமணர்கள் அவரது சன்னதியில் வேதம் ஓதுகிறார்கள். காயத்திரி மந்திரம் செபிக்கிறார்கள். பக்தி என்றால் என்ன என்றே அறியாத நம்மை போன்றவர்கள் யார் கைவிட்டாலும், சாயி நம்மை கைவிடமாட்டார் என்ற நம்பிக்கையில் இருக்கின்றார்கள். எப்படியோ சாயி யாரை ஆசீர்வதிக்கிறாரோ அவர்கள் எல்லையற்ற வலிமை பெற்று மெய் எது? பொய் எது? என்று பகுத்துணரும் ஞானத்தை அடை கின்றார்கள்.

இந்த சாயி கருணைக்கடல். இல்லை என்றால் இந்த ஏதுமறியாத ஹேமாட் பந்த் என்ற இவனை ஆட்கொண்டு சாய் சத்சரிதம் என்ற காவியத்தை படைப்பாரா? இவனுக்கு என்ன தகுதி இருக்கிறது என்று என்னை தேர்ந்தெடுத்தார் சாயி. அவர் கருணைக்கடல் என்பதற்கு வேறு எந்த சான்று தேவை. ஆயினும் சாயி அனைத்து பொறுப்புகளையும் ஏற்றுக் கொண்டதால் சத்சரிதம் எழுத நான் எவ்வித சிரமமும் படவில்லை. நான் சாயி என்ற பரப்பிம்மத்தால் ஆசீர்வதிக்கப்பட்ட அதிர்ஷ்டசாலியாக உணர்கிறேன்.



– வே.ஸ்ரீராம்

இப்போது வணி என்ற ஊரைச்சேர்ந்த காகாஜி என்பவர் எப்படி பாபாவால் சீரடிக்கு இழுக்கப்பட்டார் என்ற கதைக்கு வருவோம்.

நாசிக் ஜில்லாவைச் சேர்ந்த வணியில் காகாஜி வைத்யா என்பவர் வாழ்ந்து

வந்தார். அவர் ஸ்ரீ சப்தசிருங்கி தேவியின் பூஜாரி. தற்சமயம் அவர் மிகுந்த துயரத்தில் இருந்தார். தம்மை துயரத்தில் இருந்து மீட்டு தமக்கு அமைதியளிக்கும்படி ஸ்ரீ சப்தசிருங்கி தேவியிடம் பிரார்த்தனை செய்தார். அன்றிரவு அவரின் கனவில் தோன்றிய தேவி, பாபாவிடம் செல்வாயாக! உன் மனம் அமைதியடையும் என்று கூறினாள்.

அந்த பாபா யார் என்பதை தேவியிடம் கேட்கும் முன்பே கனவு கலைந்து போனது. தேவி கூறிய பாபா யாராக இருக்கக்கூடும் என்று பலவாறு யோசித்து அந்த பாபா சிவனாகத்தான் இருக்க வேண்டும் என்று கருதி திரையகம்பேஸ்வரம் சென்று பத்து நாட்கள் தங்கினார். தினமும் காலையில் குளித்து, ஆலயம் சென்று அபிசேக ஆராதனையுடன் ருத்ர மந்திரங்களையும் பயபக்தியுடன் கூறி வந்தார்.

இவைகளை செய்தும், அவரின் வாழ்க்கையில் ஏதும் மாறவில்லை. கஷ்டங்களும், மனவருத்தமும் அதிகரித்ததே அன்றி குறையவில்லை. பின் மீண்டும் தேவியிடம் சென்று மிகவும் மனமுருக வேண்டினார். அன்றிரவு தேவி அவரது கனவில் மீண்டும் தோன்றி, நான் கூறிய பாபா சீரடி கிராமத்தில் இருக்கிறார் என்று கூறி மறைந்தது. கனவில் இருந்து விழித்த காகாஜி சீரடி எங்கே இருக்கிறது, அங்கு எப்படி போவது இன்று குழம்பித் தவித்தார்.

ஒரு ஞானியை தரிசிக்க உண்மையான ஆர்வத்துடன் யார் முயற்சிக்கின்றானோ அவனது விருப்பத்தை ஞானி மட்டுமல்ல, கடவுளும் நிறைவேற்றி வைப்பார். உண்மையில் ஞானியும், கடவுளும் வேறு வேறு அல்ல, இருவரும் ஒருவரே. ஞானியைப் பார்க்க அவனாகவே செல்கிறான் என்று எவனாவது நினைத்தால் அது அகங்காரமாகும். ஞானினுடைய அருளே அவரை நாம் தரிசிப்பதற்கு காரணமாகும்.

சீரடிக்கு செல்வதற்கு தனக்கு யார் வழிகாட்டுவார்கள் என்று காகாஜி நினைத்துக் கொண்டிருந்த போது, சீரடியில் பாபா அதற்குண்டானவரை தயார்படுத்திக்கொண்டிருந்தார்.

பாபாவின் மிக நெருங்கிய அடியவரான சாமா சிறுவயதில் நோயினால் கடுமையாக பாதிக்கப்பட்டார். அவரது தாயார் அவர்களின் குல தெய்வமான வணி சப்தசிருங்கி மாதாவிடம், தன் மகன் உயிர் பிழைத்து விட்டால் அவனை அழைத்து வந்து அவளது பாதத்தில் காணிக்கை சமர்ப்பிக்கும்படி வேண்டிக்கொண்டாள்.

சில ஆண்டுகளுக்குப்பின் அவரது தாயார் தனது ஸ்தனங்களில் ஒரு வித தோல் நோயினால் அவதிப்பட்டாள். அச்சமயத்தில் தேவியிடம் மீண்டும் ஒரு வேண்டுதல் வைத்தாள். இந்த இரண்டு வேண்டுதல்களும் நிறைவேற்றப்படாமலே இருந்தன. தாயாரும் தனது மரணப் படுக்கையில் சாமாவிடம், தனது வேண்டுதல்களை நிறைவேற்றும்படி சத்தியம் வாங்கிக்கொண்டு உயிர் நீத்தாள்.

பின்னர் சாமா இவ்வேண்டுதல்களை மறந்துவிட்டார். இவ்வாறாக



முப்பது ஆண்டுகள் சென்று விட்டன.

இத்தருணத்தில் ஒரு புகழ் பெற்ற சோதிடர் ஒருவர் பாபாவின் தரிசனத்திற்கு சீரடிக்கு வந்திருந்தார். அவர் சீமான் பூட்டி போன்றவர்களுக்கு கணித்து சொன்ன ஆரூடங்கள் உண்மையாக இருந்தன. எனவே சாமாவின் தம்பியான பாபுஜீ சோதிடரிடம் தனது குடும்பத்தின் நிலையை கணித்துத் கூறும்படி கூறினார். சோதிடரும் அவர்களின் தாயார் குலதெய்வத்திடம் வைத்த இரண்டு வேண்டுதல்கள் நிறைவேறாமல் இருப்ப தால்தான் குடும்பத்திற்கு சோதனைகள் வருகின்றன என்று கூறினார்.

பாபுஜியும் சாமாவிடம் விபரத்தைக்கூற, சாமா தனது தாயாரின் வேண்டுதல்களை நினைவுகூர்ந்து, இனியும் தாமதிக்கக் கூடாது என்று தாயாருக்காக வெள்ளியில் இரண்டு தனங்களை செய்து எடுத்துக்கொண்டு மசூதிக்குச்சென்று பாபாவின் முன்னால் காணிக்கைகளை வைத்து விபரத்தைக்கூறி, பாபா எனக்கு தாங்களே சப்தசிருங்கி மாதா இதை ஏற்றுக்கொண்டு எங்களின் வேண்டுதல் களில் இருந்து விடுவிக்க வேண்டும் என்று வீழ்ந்து பணிந்தார்.

பாபா, நல்லது ஆனால் இக்காணிக்கைகளை எடுத்துக் கொண்டு நேரில் சென்று மாதா விற்கு அர்பணித்துவிடு என்று உதியை கொடுத்து வணிக்குச் செல்ல அனுமதி வழங்கினார். உடனடியாக சாமா வணிக்குப் புறப்பட்டார்.

வணிக்குச்சென்ற சாமா, தேவியின் பூஜாரியான காகாஜியை தேடி கண்டுபிடித்து அவரின் வீட்டுக்கதவை தட்டினார். அப்போதுதான் காகாஜி, தான் எப்படி சீரடிக்கு செல்வது என்று யோசித்துக் கொண்டிருந்தார். கதவு தட்டப்படுவதை கேட்ட காகாஜி கதவை திறக்க வாசலில் சாமாவை நின்றுகொண்டிருந்தார். அவரை அழைத்து காகாஜி விபரம் கேட்க, தான் வந்த காரணத்தை அவரிடம் கூறினார் சாமா.

அதற்கென்ன சிறப்பாக செய்துவிடலாம் என்று கூறிய காகாஜி தாங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள் என்று வினவ,

சாமா தான் சீரடியில் இருந்து வருகிறேன். எனது தெய்வம் பாபாவின் ஆணைப்படியே இங்கு

வந்து எனது தாயின் வேண்டுதலை சமர்ப்பிக்க வந்தேன் என்று கூற, காகாஜி ஆர்வம் மிகுதியால் சாமாவை கட்டிப்பிடித்து ஆனந்தக் கூத்தாடினார்.

பின்பு தனது கதையை சாமாவிடம் கூறி பாபாவின் லீலைகளை எண்ணி ஆச்சர்யப்பட்டார். பின்னர் சாமாவின் வேண்டுதல்களை நிறைவேற்றியபின்னர் இருவரும் சீரடிக்கு பயணப்பட்டனர். சீரடிக்கு வந்ததும் காகாஜி மசூதிக்குச் சென்று பாபாவின் பாதங்களில் வீழ்ந்தார். பாபாவைப் பார்த்ததும் கண்கள் குளமாயின. அவரால் பாபாவிடம் ஒன்றும் பேச முடியவில்லை. பாபாவும் அவரிடம் பேசவில்லை. ஆனால் காகாஜியின் மனதில் இருந்த பயமும் கலக்கமும் அந்த விநாடியில் இருந்து எங்கோ தொலைந்து போயின. மனம் சட்டென்று அமைதியாக மாறிப்போனது.

காகாஜியின் மனம், என்ன ஆச்சர்யம் நானும் பாபாவிடம் எதுவும் கேட்கவில்லை. பாபாவும் என்னிடம் எதுவும் பேசவில்லை. ஏன் என்னை ஆசீர்வதிக்க கூட இல்லை. ஆனால் அவரை தரிசித்த மாத்திரத்தில் இம்மாதிரியான அற்புதங்கள் நடக்குமா? என்று வியந்து அந்த விநாடியில் இருந்து பாபாவின் பாதங்களில் பரிபூரணமாக சரணடைந்தார் காகாஜி.

தன் கவலைகளையும், கஷ்டங்களையும் முழுமையாக மறந்து ஆனந்தமும், அமைதியுமாக பாபாவின் முன்பாக ஏதும் பேசாமல் பன்னிரெண்டு நாட்கள்



தங்கியிருந்தார். பின்பு பாபாவின் உதியுடன், ஆசியையும் பெற்று மகிழ்ச்சியாக வீடு திரும்பினார்.

அடுத்து பாபாவின் மிக நெருங்கிய பக்தரான குசால்சந்த் அவர்களின் கதைகளை கருத்தூன்றி கவனிப்போம். ஒரு மனிதன் பாபா சம்பந்தப்பட்ட கனவுகளைக் கண்டால் அது உடனே நடந்துவிடும் என்று கூறப்படுகின்றது. அதைப்போன்றதுதான் இந்தக் கதையும். ஓர் நாள் காலையில் பாபா, காகாஸாகேப் தீட்சித்தை அழைத்து, ரஹதாவில் இருக்கும் குசால்சந்தை பார்த்து வெகு நாட்களாகிறது. அவரை சீரடிக்கு அழைத்து வருங்கள் என்று கூறினார்.

உடனே காகாசாஹேப் தீட்சித்தும் ஒரு குதிரை வண்டியை அமர்த்திக்கொண்டு ரஹதாவை நோக்கிச் சென்றார். ஊர் எல்லையில் குசால்சந்தின் மகனைக் கண்டவர் அவனை நோக்கி எங்கே செல்கிறாய் என்று கேட்டார் அதற்கு அவனோ, என் தந்தை சீரடிக்குச் செல்வதற்கு குதிரை வண்டி ஏற்பாடு

செய்வதற்காக என்றான். வண்டி பிடிக்க வேண்டாம் என்று கூறி அவனையும் அழைத்துக்கொண்டு குசால்சந்த்திடம் சென்று உங்களை பாபா அழைத்து வரச்சொன்னார் என்று கூறினார்.

குசால்சந்த் வெகுவாக ஆச்சர்யப்பட்டார்.

மதிய உணவிற்குப்பின் சற்று குட்டி தூக்கம் போட்டேன். அப்போது கனவில் வந்த பாபா உடனே சீரடிக்கு வரும்படி கூறினார். நானும் உடனே புறப்பட எனது மகனை குதிரை வண்டி பிடித்துவரும்படி அனுப்பினேன். ஆனால் அதற்குள் பாபாவே உம்மை அனுப்பி என்னை அழைத்து வரக்கூறியிருக்கிறார் என்று வியந்து பேசிக்கொண்டே இருவரும் சீரடிக்குத் திரும்பினர். குசால்சந்த் பாபாவை தரிசித்து அன்புடன் பேசிக் கொண்டிருந்தார். இக்காட்சியைக்கண்ட அனைவரும் மகிழ்ச்சியுற்றனர். பாபாவின் இந்த லீலையைக் கண்டு குசால்சந்த் மிகவும் உணர்ச்சிவயப்பட்டார்.

பம்பாயைச்சேர்ந்த ராம்லால் என்ற பஞ்சாபி ஒருவர் ஒருமுறை கனவு கண்டார். அதில் பாபா தோன்றி சீரடிக்கு வருமாறு கூறினார். ராம்லால் அதுவரை பாபாவைப் பார்த்ததில்லை. தன் கனவில் வந்த உருவம் ஒரு மகானைப்போல் இருக்கிறதே! யாராக இருக்கும், அவரை பார்க்க வேண்டுமே என்று யோசித்தபடியே அன்று மாலை கடைவீதியில் நடந்து கொண்டிருந்தபோது பாபாவின் படத்தை ஒரு கடையில் கண்டார்.

தான் கனவில் கண்ட அதே தோற்றம் அந்த படத்தில் இருந்தைக் கண்டு ஆச்சர்யம் அடைந்து அக்கடைக்காரரிடம் விசாரித்ததில் அவர் சீரடியைச் சேர்ந்த சாயிபாபா என்று அறிந்து கொண்டார். உடனே சீரடிக்குச் சென்று சாயிநாதரைப் பணிந்தார். தன் ஆயுள்காலம் முழுவதும் சீரடியிலேயே தங்கினார். தரிசனத் திற்காக உலகம் முழுவதும் இருந்து இவ்விதமாக தமது அடியவர்களை சாயி கொண்டு வந்தார். கொண்டு வந்தது மட்டுமின்றி அவர்களது ஆத்மார்த்தமான லௌகீக தேவைகளையும் இன்று வரை பூர்த்தி செய்கின்றார்.

தனது மரணத்தறுவாயில் ஒருவனுக்குள்ள ஆசை அல்லது எண்ணம் அவனது அடுத்த சென்மத்தை நிர்ணயிக்கின்றது. ஸ்ரீ கண்ண பரமாத்மாவும், மரணத்தருவாயில் எவன் என்னை எண்ணுகின்றானோ, அவன் என்னிடமே வருகின்றான். என்று கூறுகிறார்.

ஒருவன் இறக்கும் தறுவாயில் குறிப்பிட்ட நல்ல நினைவுகளில் இருக்க முடியாது. பல்வேறு காரணங்களால் நாம் பயந்து போய் தேவையற்ற குழப்பங்கள் அடைய நேரிடலாம். எனவே நாம் வாழும் காலத்தே ஏதாவது நல்ல நினைவுகளையோ, இறைவன் நாமங்களையோ உச்சரிப்பதற்கு தொடர்ந்து பயிற்சி செய்து வந்தால் நமக்கு ஏற்படும் இன்ப துன்ப நினைவுகளிலும் நம்மையறியாமல் இறைவனின் நாமங்களை உச்சரிப்போம்.



எனவே சதா சர்வ காலமும் இறைவனை நினைவுகூர்ந்து அவனது நாமங்களை உச்சரிக்குமாறு ஞானிகள் போதிக்கிறார்கள். நல்ல பக்தர்கள் தம்மை ஞானிகளிடம் ஒப்படைத்து விடுகிறார்கள். சர்வமும் அறிந்த ஞானிகள் அவர்களது கடைசி காலத்தில் அவர்களை வழிநடத்தி உதவுவார்கள் என்ற நம்பிக்கைதான் அதற்கு காரணம். இதைப்போன்ற நிகழ்வு தான் சன்யாசி விஜயானந்த் அவர்களின் கதை.

சென்னையைச் சேர்ந்த விஜயானந்த் என்ற சன்னியாசி மானஸரோவருக்குத் தீர்த்த யாத்திரை புறப்பட்டார். வழியில் பாபாவின் புகழைக் கேள்விப்பட்டு, அவர் சீரடிக்கு வந்து தங்கினார். சீரடியில் எதார்த்தமாக ஹரித்துவாரைச் சேர்ந்த சோமதேவ் என்ற சன்யாசியை சந்தித்தார். மானஸரோவர் பயணத்தைப்பற்றி அவரிடம் விசாரித்தார்.

அதற்கு அவர் கங்கோத்திரிக்கு மேல் மானஸரோவர் 500 மைல் உயரத்தில் உள்ளது என்றும் ஏராளமான பனி மற்றும் 50 மைலுக்கு ஒரு மொழி. வழியில் யாத்திரீகர்களுக்கு தொல்லை கொடுக்கும் பூடான் மக்கள் போன்ற கஷ்டங்களை விவரித்தார். இதை கேட்ட துறவி மனம் தளர்வுற்று தனது பயணத்தை ரத்து செய்தார்.

பின்பு பாபாவிடம் சென்று சாஷ்டாங்கமாக பணிந்தபோது, பாபா கடும் கோபம் கொண்டு, இந்த உபயோகமற்ற சன்யாசியை துரத்துங்கள். அவரின் நட்பு யாருக்கும் பயன்தராது என்று கூறினார். அவருக்கு பாபாவின் குணாதியம் தெரியாதனால் மிகவும் சோர்வடைந்தார். ஆயினும் மசூதியின் ஓரத்தில் அமர்ந்து அங்கு நடந்து கொண்டிருப்பதை மௌனமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

அது காலை நேர தர்பார். மசூதியில் கூட்டம் அதிகமாக இருந்தது. பாபா பல்வேறு விதமாக ஆராதிக்கப்பட்டார்.சிலர் அவரின் கால்களை கழுவிக்கொண்டிருந்தனர். சிலர் அவர் காலை கழுவிய நீரை எடுத்து குடித்துக் கொண்டிருந்தனர். சிலர் அவற்றை பயபக்தியுடன் பார்த்துக் கொண்டிருந்தனர். சிலர் பாபாவிற்கு சந்தனம் பூசினர், சிலர் அவரின் புனித மேனிக்கு நறுமண தைலத்தை பூசினர். குலம், ஆசாரம் ஆகியவற்றை மறந்து அனைவரும் ஒற்றுமையாக வழிபாடு செய்தனர்.

பாபா அத்துறவியின்மேல் கோபப்பட்டாலும்,அவர் பாபாவின் மேல் எந்தக் கோபமும் இல்லாத வராய் பாபாவிற்கு நடக்கும் ஆராதனையை பார்த்து ரசித்துக் கொண்டு மசூதியிலேயே இருந்தார்.

சீரடியில் அவர் இரண்டு நாட்கள் தங்கியிருந்தார். அப்போது அவருடைய தாயார் மிகவும் நோய்வாய்பட்டிருப்பதாக

சென்னையில் இருந்து அவருக்கு தந்தி வந்தது. அவர் மிகவும் மனம் தளர்ந்து அவரது தாயார் இருக்கும் இடத்திற்கு செல்ல விரும்பினார். ஆனால் அவரால் பாபாவின் அனுமதியின்றி செல்ல முடியாது. எனவே தமது கரத்தில் தந்தியுடன் பாபாவிடம் சென்று விபரத்தை கூறி வீடு திரும்ப அனுமதி கேட்டார்.

வருங்காலத்தை நன்குணர்ந்த சாயிநாதர் அவரிடம், உன்னுடைய தாயாரை இவ்வளவு நேசிக்கும் நீ ஏன் துறவியா னாய்? சொந்த பந்தங்களும், ஆசா பாசங்களும் காவி உடைக்கு ஒத்துவராது.

உன்னுடைய இருப்பிடத்திற்குச் சென்று அமைதியாகவும், பொறுமை யாகவும் காத்திரு! நீ தங்கி யிருக்கும் வாடாவில் பல கொள்ளைக் காரர்கள் இருக்கிறார்கள். உனது கதவுகளை நன்றாக தாழிட்டுக் கொண்டு ஜாக்கிரதையாக இரு!

செல்வமும், சுபிட்சமும் நிலையற் றவை. இவ்வுடல் மரணத்திற்கு உட்பட்டது என்பதை உணர்ந்து இம்மை, மறுமைப் பொருட்களின் மீதுள்ள பற்றை விட்டுவிட்டு உன் கடமையைச் செய்து இறைவனின் பாதங்களில் சரணைவாயாக! உனது அனைத்து தொல்லைகளில் இருந்தும் விடுபட்டு பேரானந்தப் பெருநிலையை அடைவாய். உனது முந்தைய பிறவியில் நல்வினைகள் அதிகம். ஆகவே நீ இங்கு வந்துள்ளாய்.

இப்போது நான் கூறுவதை கவனி. உனது அந்திம வாழ்க் கையை உணர்ந்து அதற்கு தயாராகு! ஆசைகள் சிறிதும் இன்றி பக்திப்பூர்வமாக நாளை முதல் பாகவதத்தை மூன்று சப்தாகங்கள் பாராயணம் செய்! பரமாத்மா உன்னிடம் மகிழ்ச்சி கொண்டு உனது கவலைகளை அழிப்பார். உனது துன்பங்கள் மறைந்து நீ அமைதி பெறுவாய் என்று கூறினார்.

எல்லாம் அறிந்த சாயிநாதர், விஜயானந்த் சுவாமிகளின் முடிவு நெருங்கிக் கொண்டிருப்பதை அறிந்து மரண தேவனான யமனை மகிழ்விக்கும் 'இராம விஜயத்தை' படிக்கும்படி செய்தார்.

அடுத்தநாள் அதிகாலையில் கு ளித்து முடித்து மற்ற சம்பிரதாயங்களைச் செய்த பிறகு லெண்டித்தோட்டத்தில் உள்ள ஒரு தனிமையான இடத்திற்குச் சென்று பாகவதத்தை படிக்கத் தொடங்கினார். இரண்டு முறை பாகவதத்தை பாராயணம் செய்ததும் மிகவும் சோர்வடைந்தார் விஜயானந்த். பின்னர் அவர் வாடாவிற்கு திரும்பி மூன்றாவது நாள் அதிகாலை பக்கீர் பாபா என்ற படேபாபாவின் மடியில் உயிர் துறந்தார்.

பாபா அவரது உடலை ஒருநாள் பாதுகாக்கும்படி கூறினார். பின்னர் காவல் அதிகாரிகள் வந்து உரிய விசாரணை மேற்கொண்டு, உடலை அடக்கம் செய்யும்படி அனுமதியளித்தனர். பிறகு உரிய இடத்தில் தக்க மரியாதையுடன் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ்விதமாக துறவி விஜயானந்திற்கு உதவி புரிந்து, அவருக்கு நற்கதியளித் தார் பகவான் சாயிநாதர்.

தொடரும்.



சங்கர் மகாராஜ் சரிதம்

மஹாராஷ்டிர மாநிலத்தில் உள்ள அகமது நகரிலிருந்து சுமார் 40 கிலோமீட்டர் தொலைவில் விருத்தேஸ்வர் என்னும் ஒரு ஊர் நாத் சம்பிரதாயத்தை சேர்ந்தவர்களுக்கு முக்கியமான இடம். நாத் சம்பிரதாயம் மகாராஷ்டிரம்,மத்திய பிரதேசம், குஜராத், உத்தர பிரதேசம் மற்றும் நேபாளம் போன்ற இடங்களில் மிகவும் பிரசித்தி பெற்றது. அவர்கள் சிவனை ஆதிநாதர் என்று அழைப்பார்கள்.

நாத் சம்பிரதாயத்தில் ஒன்பது துறவிகள் மிகவும் முக்கியமான வர்கள். அவர்கள் மச்சேந்திரநாதர், கோரக்நாதர், ஜலந்தர நாதர், கனிபநாதர், கஹினிநாதர்,நாகேஷ நாதர், சர்படநாதர், பர்தரிநாதர், ரேவண நாதர். மச்சேந்திரநாதரையும், கோரக் நாதரையும் குருவாகக் கொண்டு பல சிஷ்யர்கள் தோன்றினர். மச்சேந்திரநாதர் தமிழ் சித்தர்களில் ஒருவரான மச்சமுனி என்றும், கோரக்நாதர் கோரக்க சித்தர் என்றும், பர்தரிநாதர் பட்டினத்தாரின் சிஷ்யரான பத்ரகிரியார் என்றும் சிலரால் நம்பப்படுகிறது.

தமிழ் சித்தர்களான இவர் களுடைய கதையும் நவநாதர்கள் சரித்திரமாக சொல்லப்படும் கதையும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருக்கிறது. மேலும் அவர்களின் பெயர்களும் ஒரே மாதிரி யாக இருப்பதனால் இவர்கள் ஒரே ஆட்களாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. ஆனால் இதில் ஒரே ஒரு வித்தியாசம் என்னவென்றால், தமிழில் அவர்கள் எழுதிய நூல்கள் வேறு, வட நாட்டில் இருக்கும் நூல்கள் வேறு.

நவநாதர்கள் விருத்தேஸ்வரில் பல யக்ஞங்கள் செய்தற்கான சாட்சிகள் உள்ளன. மேலும் அவர்கள் தவம் செய்த குகைகள் அங்கு உள்ளன. மச்சேந்திரநாதர் யக்ஞம் செய்வதற்காக ஏற்றிய துனி இன்றளவும் அணையாமல் எரிந்து கொண்டிருக்கும் அதிசயம் அங்கு உள்ளது. விருத்தேஸ்வர் கோவில் இரண்டு மலைகளுக்கு

நடுவில் அமைந்திருக்கும் இடம். அனைவரும் சென்று தரிசனம் செய்ய வேண்டிய ஒரு அழகான இடம்.

ஒருமுறை ஸ்ரீ சங்கர் மகாராஜ் அப்பாவை அந்த குகைகளுக்கு அழைத்துச் சென்று அங்கிருந்த குகைகளுள் கஹினி நாதர் தவம் செய்த குகையை சுட்டிக் காட்டி

அவருடைய சிஷ்ய கூட்டத் தில் நீயும் ஒருவர் என்பதையும் உணர்த்தினார். அதை உணர்வுப் பூர்வமாக அறிந்து கொண்ட அப்பாவின் உடல் சிலிர்த்தது. உடனே மகராஜ் "நீ நாத் சம்பிரதாயத்தை சேர்ந்தவன் என்பதை உணர்ந்து கொண் டாயா?"என்றார் மகராஜ்.

ஒருவர் நாத் சம்பிரதாயத்தில் தீக்ஷை பெற்றுக்கொண்டால் அவர்கள் எவ்வளவு பிறவி எடுத் தாலும் அவர்களுடைய நாத் குரு அவர்களை கைவிடவே மாட்டார் என்று மகராஜ் அவரிடம் விளக்கிக் கூறினார். இதிலிருந்து ஸ்ரீ சங்கர் மகராஜும் நாத் சம்பிரதாயத்தை சேர்ந்தவர்தான் என்பது நமக்கு விளங்குகின்றது.

சீடனுக்கு சந்தேகம் இருக்கும் பட்சத்தில் அதை தெளிவுபடுத்த வேண்டியது குருவுடைய கடமை. அப்படி அப்பா கேட்ட ஒரு கேள்வியும் அதற்கு மகராஜ் எப்படி விளக்கத்தை அளித்தார் என்பதையும் அறிந்து கொள்வோம்.

ஒருமுறை அப்பா மகராஜிடம், "பல காலங்களுக்கு முன்னால் தன் உடலைத் துறந்த ஒரு சித்தரால் எப்படி மீண்டும் உடலுடன் வர முடிகிறது" என்று கேட்டார். அதற்கு மகராஜ், "மீண்டும் உடலுடன் வருவதற்கான சக்தி அவர்களிடம் இருக்கிறது" என்று கூறினார். அப்பா ஒரு மருத்துவர் என்பதால் மகராஜ் கூறிய பதிலில் அவருக்கு திருப்தி ஏற்படவில்லை.

இதுபோல நடப்பதற்கு சாத்தியமே இல்லை என்று மகராஜிடம் விவாதம் செய்தார். "நீ இதை நம்புவதற்காக நான் நாளைக்கு உன் வீட்டுக்கு மீனாநாதரை அழைக்கிறேன். அவரை வரவேற்க தக்க ஏற்பாடுகள் செய்" என்று மகராஜ் கூறினார். நவநாதர்களின் ஒருவரான மச்சேந்திரநாதர்தான் மீனாநாதர் என்றும் அழைக்கப்படுகிறார்.

மகராஜின் ஆணைக்கிணங்க அப்பா மீனாநாதரை வரவேற்க தக்க ஏற்பாடுகள் செய்துவிட்டு குடும்பத்தினருடன் மீனாநாதரின் வருகைக்காக காத்திருந்தார் சரியாக காலை ஒன்பது மணிக்கு மீனாநாதர் வீட்டுக்கு வந்தார்.



திருமதி. மாதங்கி பாலாஜி

சுமார் 7 அடி உயரத்தில் நல்ல கட்டுமஸ்தான உடலுடன் தகதகக்கும் மேனியுடன் தீர்க்கமான பார்வையுடன் மான்தோல் தரித்து கொண்டிருந்த மீனாநாதர், மகராஜ் அவரை தக்க மரியாதையுடன் வரவேற்று உட்கார வைத்தார். அப்பா அவருடைய பாதத்தில் விழுந்து நமஸ்காரம் செய்தார். மகராஜ் அப்பாவை மீனாநாதருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

மகா யோகியான மீனாநாதருக்கு அந்த வீடு ரொம்ப பரிட்சியமானதாக இருந்தது என்று அப்பாவுக்கு தோன்றியது. மகராஜும் மீனாநாதரும் சுமார் அரை மணி நேரத்திற்கு யோகத்தைப் பற்றிபேசிக் கொண்டிருந்தனர். அப்பாவுடைய மனைவி அவருக்கு அருந்த பால் கொடுத்துவிட்டு அவருடைய பாதங்களில் விழுந்து வணங்கினார். அந்த பாலை கொஞ்சம் பருகிவிட்டு யோகி அவர்களை பரிபூரணமாக ஆசீர்வாதம் செய்துவிட்டு புறப்பட்டார். அப்பாவுடைய வீட்டு படியை விட்டு இறங்கும் போதே அப்பாவுடைய கண்களுக்கு முன்பாகவே மீனாநாதரின் உருவம் மறைந்து போனது. இதை கவனித்துக் கொண்டிருந்த மகராஜ் சிரித்துக் கொண்டே அப்பாவுடைய முதுகில் தட்டிவிட்டு "இப்போது நம்புகிறாயா!" என்று கேட்டார்.

அறிவியலுக்கு அப்பாற்பட்ட விஷயங்கள் இந்த உலகத்தில் உள்ளன. அனைத்தும் நிரூபிக்கப் பட்டால் மட்டுமே அறிவியல் ஒரு விஷயத்தை ஏற்றுக் கொள்ளும். ஆனால் இந்த பிரபஞ்சம் அறிவியலைக் கடந்த சூட்சமங்கள் நிறைந்தது. அவற்றை குருவால் மட்டுமே உணர்த்த முடியும். ஆகவே முற்றும் உணர்ந்த குருவிடம் சரணாகதி அடைந்து நம் பிறவிப்பயனை பெறுவது மட்டுமே நமக்கு சாத்தியம்.

கி.பி.1930 ஆம் ஆண்டில் ஒருநாள் மகராஜ் தான் சமாதி அடையப் போவதாக அப்பாவிடம் கூறினார். ஒரு குறிப்பிட்ட நாளைக் கூறி, அந்த நாளின் கிரக நிலைகள் சமாதி அடையவதற்கு சாத்தியமாக இருப்பதாகக் கூறினார். ஆனால் அப்பாவோ மகராஜிடம் சமாதியை தள்ளிப் போடும்படி வேண்டு கோள் விடுத்தார். இன்னும் சில காலம் இந்த உடலுடன் இருந்து தனக்கு ஞானம் வழங்க வேண்டும் என்று அப்பா மகராஜிடம் கேட்டுக் கொண்டார். மகராஜ் அவருக்கு எல்லா ஞானத்தையும் வழங்க சம்மதம் தெரிவித்துடன் மட்டுமல்லாமல் அதே மாதிரியான கிரக நிலைக்காக அடுத்த 17 வருடங்கள் காத்திருந்தார்.

ஒரு சித்தர் அல்லது யோகி ஒரு குறிப்பிட்ட நாளில் சமாதி அடைவதற்காக தன்னை தயார்படுத்திக் கொள்வார்கள். ஆனால் மகராஜ் தன் சிஷ்யரின் வேண்டுகோளுக் காக தன்னுடைய விருப்பத்தை மாற்றிக் கொண்டு காத்திருந்தார் என்பதன் மூலம் அவர் தன் சீடர்களின் மீது கொண்டிருக்கும் அன்பை நம்மால் உணர முடிகிறது.

17 வருடங்கள் கழிந்தன. கி.பி. 1947ஆம் ஆண்டு மகராஜ் அகமது நகருக்கு வந்தபோது அப்பாவிடம்



தன்னுடைய சமாதி பற்றி நினைவு படுத்தினார். அச்சமயத்தில் அவர் அப்பாவுடன் சுமார் ஒரு மாத காலம் தங்கியிருந்தார். மீதம் உள்ள அனைத்து ஞானத்தையும் வழங்கிவிட்டு கிளம்பத் தயாரானார். கிளம்புவதற்கு முன் மகராஜ் தான் கழுத்தில் அணிந்து கொண்டிருந்த வைர சங்கிலியை எடுத்து அப்பாவின் கழுத்தில் அணிவித்துவிட்டு, இதை தன்னுடைய ஞாபகார்த்தமாக வைத்துக்கொள் என்று கூறினார். உடனே அப்பா, அதை கழற்றி மகராஜுடைய பாதத்தில் வைத்துவிட்டு "உங்களை ஞாபகம் வைத்துக்கொள்ள இந்த கல் எனக்கு அவசியமில்லை. நீங்கள் எப்போதும் என் மனதில்தான் இருக்கிறீர்கள் என்பது உங்களுக்கு நன்றாகவே தெரியும். அப்புறம் எதற்கு இது?" என்று கூறினார்.

இதைக் கேட்டவுடன் மகராஜ் மிகவும் சந்தோஷமாக சிரித்தார். தன் சிஷ்யர் எல்லா பரீட்சையிலும் வெற்றி பெற்றதை எண்ணி அவர் பூரித்துப் போனார். மிகுந்த மனநிறைவோடு மகராஜ் புனேவுக்கு கிளம்பினார். பின்னர் சிறிது நாட்களிலேயே அவர் நிரந்தரமாக தன் உடலைத் துறந்து சமாதி அடைந்தார். அந்த சமயத்தில் அப்பா அகமது நகரில் இருந்தார். மகராஜுடைய சமாதி செய்தி தந்தி மூலம் அவருக்கு தெரிவிக்கப்பட்ட உடன் புனேவுக்கு புறப்பட்டார்.

அனைத்தையும் உணர்ந்து ஞானம் பெற்றிருப்பினும் மாயை அவ்வளவு எளிதாக நம்மை விடாது.

இனி மகராஜை உடலுடன் பார்க்க முடியாது என்பது அவருக்கு சங்கடத்தை உண்டாக்கியது. மகராஜின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொண்ட கொண்ட பின்னர் அவர் புனேயை விட்டுக் கிளம்பி அகமது நகருக்கு வந்து சேர்ந்தார். அவர் தன்னுடைய நேரத்தை தியானேஸ்வரியை படிப்பதிலேயே செலவழித்தார்.

அப்பாவுக்கும் வயதாகி கொண்டே போனது. அவருடைய மனைவி தாரா 1973ஆம் ஆண்டு இறந்து போனதற்கு பின்னர், அவர் புனேவில் இருக்கும் அவரது மூத்த மகனான நாராயண தத்தா வீட்டில் தங்கினார். அவர் தன் மகனிடம், "நான் உன்னுடன் இன்னும் ஆறு வருட காலத்துக்கு இருப்பேன்" என்று கூறினார். கி.பி. 1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அப்பாவுக்கு உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாகி மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டார்.

அவர் ரத்தசோகை நோயால் பாதிக்கப்பட்டு இருந்தார். அவர் தன் மகனிடம், "எதற்கும் கவலைப் படாதே! என் உடல் நலமாகி விடும். மகராஜ் எனக்கு புனே மக்களை வழிநடத்துவதற்காக சில வேலை களை கொடுத்திருக்கிறார். அதனால் இப்போது எனக்கு ஒன்றும் ஆகாது" என்று கூறினார். அவர் கூறியபடியே அவர் உடல் நலம் தேறி புனேவில் தன் மருத்துவத் தொழிலை தொடங்கினார். முதல் இரண்டு மாதத்திற்கு அனைவரிட மும் மருத்துவக் கட்டணம் வசூல் செய்தார். பின்னர் இலவசமாக வைத்தியம் செய்யத் தொடங்கினார்.



"ஏன் இலவசமாக மருத்துவம் செய்கிறீர்கள்?" என்று கேட்டதுக்கு, "நான் என்ன நினைக்கிறேனோ அதை செய்வதற்கு எனக்கு உரிமை கிடையாது. மகராஜ் சொல்வதை நான் அப்படியே செய்ய வேண்டும். மகராஜ் என்னை கொஞ்சம் கூட பணம் சேர்க்க அனுமதிக்க வில்லை. அகமது நகரில் வசிக்கும் போது வங்கியில் ஏதாவது பணம் சேர்ந்திருந்தால் கூட 15 நாட்களுக்கு ஒருமுறை அதை காலி செய்து ஏழைகளுக்கு வினியோகம் செய்ய சொல்லிவிடுவார்.

ஒருமுறை என்னுடைய நண்பர் ஒருவர் எனக்குத் தெரியாமல் என் வங்கி கணக்கில் பணம் செலுத்தி இருந்தார். ஆனால் அதை அறிந்த மகராஜ், மிகவும் கோபமாகி அதை எடுத்து உடனே எல்லாருக்கும் விநியோகம் செய்து விடுமாறு கட் டளையிட்டார்" என்று கூறினார்.

மகராஜ் அப்பாவுடைய தேவைகளுக்கான பணம் மட்டும் கிடைக்கும்படி அவரை ஒரு யோக வாழ்க்கை வாழ வைத்தார். வருங்காலத்தை எண்ணி பணம் சேர்ப்பது சம்சார வாழ்க்கை ஆகும். திருமணம் செய்தால்தான் சம்சார வாழ்க்கை என்று நினைக்கிறோம். ஆனால் வருங் காலத்தைப் பற்றிய சிந்தனை இருந்தாலே, அது சம்சார வாழ்க்கைதான். நிகழ்காலத்தி லேயே வாழ்வதுதான் யோக வாழ்க்கை.

கி.பி.1980 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் டாக்டர் தானேஸ்வர் என்னும் அப்பா தன் உடலை துறந்து மகராஜுடன் ஐக்கியம் ஆனார். அவர் முன்னர் கூறியபடி சரியாக ஆறு வருட காலம் அவர் தன் மகனுடன் வாழ்ந்தார். அப்பா இறந்த விஷயம் காட்டுத்தீ போல புனே முழுவதும் பரவி அவருடைய உடலை தரிசனம் செய்ய பலர் வந்தனர். சித்தயோகி மற்றும் மகராஜுடைய அத்யந்த சிஷ்யரான அப்பா தன் பூத உடலைத் துறந்து மகராஜுடன் ஐக்கியமானார்.

குரு சிஷ்ய பந்தம் என்றால் என்ன? அந்த உறவு எப்படிப் பட்டது? குரு ஒரு சிஷ்யரை எப்படி நிழல் போல தொடருவார்? சிஷ்யருடைய அஞ்ஞானத்தை விலக்கி எப்படி ஒளியேற்றுவார் ? போன்ற அற்புதமான விஷயங்கள் அனைத்தையும் அப்பா என்கிற டாக்டர் தானேஸ்வருடைய வாழ்க்கை மூலம் நம்மால் உணர்ந்து கொள்ள முடிந்தது. குருவை சரணடைவோம் வாழ்க்கையை வளமாக்கிக் கொள்வோம்.

–தொடரும்.

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

விதியின் விளையாட்டும் ஆத்மஞானமும்

சம்சார வாழ்க்கை முழுக்க செயல்களே! அங்கே ஆற அமர உட்கார்ந்து இறை உணர்வை அடைய நேரமே இல்லை! அந்தச் செயல்களில் முக்கால்வாசி தேவையற்ற செயல்களே! தேவையற்ற செயல்கள் என உணர உணர நேர விரயம் தவிர்க்கப்படுகிறது! எது தேவை? எது தேவையற்றது என்பது புரியாதவரை மூன்றல்ல மூவாயிரம் சாயி அவதாரங்கள் வந்தாலும் எதற்கும் ஆகாது.

ஏனெனில் சம்சார வாழ்க்கை முழுக்க புறம் மட்டுமே சார்ந்தவை! "அவர்கள் என்ன நினைப்பார்கள் இவர்கள் என்ன கதைப்பார்கள்" எனும் குண்டுச் சட்டிக் குதிரை வாழ்க்கையே சம்சார வாழ்க்கை! வெளியே பயணித்து பயணித்து தனக்குள் பயணித்தலை தொலைப்பதே சம்சார வாழ்க்கை! 'ரயில் நிலையத்தில் வழி அனுப்ப வந்தவன் அந்த ரயிலிலேயே ஏறி பயணிப்பது போல் தான் மாயை நிறைந்த இந்த உலக வாழ்க்கை!'


முடிச்சுகளை அவிழ்க்கும் முனைப்பும் இல்லை, அவிழ்க்க முடியவில்லை எனில் மனதளவில் வெட்டிவிட மனதிற்கு துணிவும் இல்லை! ஆனால் ஞானிகளோ கடமையை செய்கிறோம் என்கிற உணர்வே இன்றி அதை ஒரு குழந்தை விளையாட்டாகச் செய்கிறார்கள்!

செய்யும் போதே குழப்பம் வருவது மனித மனதின் சுபாவம்! ஆனால் ஒன்றுமே செய்யாவிட்டாலும் மூடன் குழம்புவான் குழம்புவதே மனதின் குணமாக இருக்கிறது! நம்பிக்கை செத்த பிறகு தான் வருகிறது சந்தேகம் தான் சடுதியில் வருகிறது! ஒன்றை இழக்கும் வரை மனிதனுக்கு அதன் அருமை புரிவதில்லை! 'மனிதன் தான் ஆசைப்பட்டே தேர்ந்தெடுத்த சம்சார வாழ்க்கை முதுகில் ஏறி கடமை எனும் கழுதைப் பொதி கனக்க கனக்க அய்யோ என்று அலறுகிறான்!'

ஆனாலும் அதில் இருந்து விடுபடும் வைராக்கியம் இல்லை! திருடனுக்குத் தேள் கொட்டியது போல் அமைதியாக அடக்கிக் கொண்டிருக்கிறான்! அறிவு மூடி இருந்தால் இதயம் மூடி இருக்கும்! இந்த 'மூடத்தனத்திற்கும் பாபாவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை!' விளையாட்டு மைதானத்தை அமைத்துத் தந்து விளையாட்டு நெறி சொல்லித் தருவதோடு பாபா ஒதுங்கி ஓரமாக இருக்கிறார்!

'குறியும் நெறியும் தவறுகிற போது ஏற்படும் பாதகங்களுக்கு அவரவர்களே பொறுப்பு!' கடமை கனக்கிறதே என மனிதன் பொருமுகிறான்! ஞானியோ கடமையை செய்தாலும் கலங்குவதில்லை என்கிறார்! ஞானிகள் எல்லாம் செயலே செய்ததில்லையா என்று கேட்கலாம்! ஆம் அவர்கள் எந்த செயலும் செய்ததில்லை! "தானே செய்கிறேன் என்று நினையாத போது அது செயல் செய்வதாக ஆகாது" என்கின்றது வேதங்கள்.

எதைச் செய்தாலும் நான் செய்கின்றேன் என்ற எண்ணமில்லாது 'எப்போதும் தன்னை ஒரு சாட்சி பாவனையில் வைத்துக் கொள்வதே ஆன்ம சாமர்த்தியம்!' அப்படித் தான் பாபாவும் திகழ்கிறார்! 'அந்த சாட்சி பாவனையே ஆத்ம ஞானம்!'



யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் தனது வாட்அப் தளத்தில் தினந்தோறும் ஒரு பொன்மொழியை பதிவிடுவதை வழக்கமாக வைத்திருக்கின்றார். அதை வலைத்தளவாசிகள் தினந்தோறும் வாசித்து மகிழ்கின்றனர். அந்த பொன் மொழிகளை வாசகர்கள் அனைவரும் படித்து மகிழவேண்டும் என்று தேதி வாரியாக தொகுத்து வழங்குகிறேன். வாசகர்கள் படித்து பயன்பெற வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.



யோகி ஸ்ரீராம் பாபாவின்
இனிய மொழிகள்

01.06.26

தன்னைச் சுற்றி நடக்கும் சம்பவம் எல்லாம் தனக்கு சாதகமாகவே நடக்க வேண்டும் என்று நினைப்பதே அகங்காரத்தின் உச்சம்.

02.06.26

பிரார்த்தனைகள் என்பது கேட்கப்படுவதும் அழிக்கப்படுவதும் இல்லை. ஞானியின் முன்னால் அவை குறைக்கப்படுகின்றன. எனவே ஞானியின் சத்சங்கத்தில் இணைந்திருங்கள்.

03.06.26

"நான்" என்ற எண்ணம் அடிமைகளின் குணமாகும். அவர்கள் ஒருபோதும் சுதந்திரமாக இருக்க மாட்டார்கள். அதுவே அவர்களின் அழிவிற்கு வழிவகுக்கும்.

04.06.26

இன்று நான் எதுவாக இருக்கின்றேனோ! அது அனைத்தும் என் குருவினால் மட்டும்தான் என்பதை மறப்பவனே குருதுரோகி!

05.06.26

யோகி என்பதற்கு சுதந்திரமானவன் என்று பொருள். அவன் ஏற்கனவே கட்டுக்களை உடைத்து வெளியே வந்தவன். அவனை எந்த ஒன்றினாலும் கட்ட முடியாது.

06.06.26

எவனிடம் தன்னைப்பற்றிய நம்பிக்கை இல்லையோ அவனே நாத்திகன்.

07.06.26

மற்றவர்களுக்கு என்ன புரியுமோ அதை மட்டும் எடுத்து சொல்வது நல்லது. புரிந்து கொள்ள முடியாததை சொல்வதால் யாருக்கும் பயனில்லை.

08.06.26

உங்களது அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் முதலில் உங்களுக்கே பயன்படுத்திக் கொள்ளுங்கள். அடுத்தவரிடம்

தொகுப்பு: ஜெயந்தி ஸ்ரீராம்

கூறாதீர்கள் அசிங்கப்பட்டுப் போவீர்கள்.

09.06.26

"அர்ச்சனை" என்ற சொல்லுக்கு "நான்" என்ற அகங்காரத்தை அழிப்பது என்று பொருள்.

10.06.26

இறைவனுக்கு "தத்துவாதீதன்" என்று பெயர். தத்துவங்களை அறியாது தத்துவத்தின் தலைவனை எப்படி அறிய முடியும். எனவே முதலில் தத்துவத்தை அறியுங்கள். பின்பு தலைவனை அறியலாம்.

11.06.26

நீங்கள் செய்யும் எல்லா காரியங்களையும் இறைவனுக்குச் செய்வதாக எண்ணிச் செய்யுங்கள். எந்த துன்பமும் உங்களைத் தொடராது.

12.06.26

எண்ணங்கள் எப்படியோ அப்படித்தான் நீயும். நீ எழுந்து நிற்பதும், வீழ்ந்து மடிவதும் உன் எண்ணங்களால் மட்டுமே!

13.06.26

சொற்களை பத்திரமாய் பயன் படுத்துங்கள் காரணம் சொற்கள் உங்களுடையது. அதனுடைய அர்த்தம் எதிராளியுடையது.

14.06.26

மனிதன் இதயத்தில் இருந்து வாழ்ந்தபோது எல்லாம் இனியதாகவே இருந்தது. அவன் என்று அறிவை உணர்ந்து மூளைக்கு குடிபெயர்ந்தானோ அன்றில் இருந்தே அழிவு தொடங்கியது.

15.06.26

குரு உங்களுக்கு எது உண்மை என்று போதிப்பதில்லை. உங்களிடம் இருப்பதில் எதுவெல்லாம் பொய் என்றே போதிக்கிறார். ஆகையால் குரு உங்களை ஏசுகின்றார் என்று நினைக்கிறீர்கள். எது பொய் என்று புரிந்து போனால் உண்மை எளிதாக புரிந்துவிடும் அல்லவா?

16.06.26

இயற்கைக்கு இறந்தகாலமும் இல்லை எதிர்காலமும் இல்லை. அதற்கு நிகழ்காலம் மட்டுமே உண்டு. இறந்த காலமும் எதிர்காலமும் மனதின் கண்டுபிடிப்புகளே!

17.06.26

மந்தபுத்தி உள்ளவர்களே பிறருக்கு அறிவுரை சொல்வார்கள் இதுவும் உலக அதிசயம்தான்.

18.06.26

எந்த நண்பரையும் குறை கூறுவதற்குமுன் அவரை சந்தித்த முதல் நாளை நினைவு கூறுங்கள்.

19.06.26

பெயர், புகழ், பணம், அதிகாரம்,பதவி, உறவு,நட்பு இவை அனைத்தும் உங்களது அமைதிக்கு அடுத்தவையே. எனவே அமைதியை தொலைத்து விடாதீர்கள்.

20.06.26

மாங்கொட்டையின் உள்ளே மாமரம் இருக்கிறது என்பது சூட்சுமம். அது மண்ணில் விழுந்து மரமாவதற்கு முன்பே அறிந்து தெளிவதே மெய்ஞானம்.

21.06.26

கவலை என்பது நீங்கள் வாங்கும் கடன் போன்றது, நோய் அதன் குட்டி. துன்பமே வட்டி.

22.06.26

உங்கள் தவறுகளை

நீங்கள் உணராத வரை உங்கள் வாழ்க்கையில் மாற்றம் என்பதை கடுகளவும் எதிர்பார்க்க முடியாது.

23.06.26

"எனக்கு எல்லாம் புரிந்து விட்டது" என்று எவன் ஒருவன் நினைக்கிறானோ அக்கணமே அவனின் ஆன்மீக வளர்ச்சி முற்றுப்பெறுகிறது.

24.06.26

குரு என்பவர் வெறும் பாடங்களை நடத்துபவர் அல்ல. மாணவன் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளும் இடங்களைச் சுட்டிக்காட்டுபவரே குரு.

25.06.26

வழிகாட்டுதல் இல்லாத ஆன்மீகம் வெறும் மாயை.

26.06.26

நேற்று நடந்தவைகளை சிந்திக்காமல், நாளை நடக்கப் போவதை யோசிக்காமல் இன்றைய நாளில் வாழ்பவனே தெய்வம் என்படுவான்.

27.06.26

உலகம் உன்னுடையது அல்ல! உலகத்தினுடையதே நீ! உலகம் ஓர் நாள் உன்னை விழுங்கி விடும். அதுபோலவே உன்னைச் சுற்றியுள்ளவர்கள் உன்னுடையவர்கள் அல்ல, ஓர் நாள் உன்னை மறந்துவிடுவார்கள். எனவே பற்றற்று வாழ்!

28.06.26

மாயையே பரமாத்மா, மாயையை உணர்ந்தவன் அதை அழிக்க முடியாது. அதை உணர்ந்து விலக முடியும். அப்படி விலகினால் அவனே பரமாத்மா!



29.06.26

நீ இல்லாது போனால் உடன் வந்தவர்கள் ஓர் நாள் உன்னை மறந்து போவார்கள். அதற்குள் உன் நினைவை பிரபஞ்சத்தில் பதித்து வை!

30.06.26

இதைப் படிக்கும் இந்த விநாடி மட்டுமே உண்மை என்று உணர்பவனே ஆத்மஞானி

31.06.26

வெறுமையாகத்தான் இந்த உலகிற்கு வந்தோம். வெறுமையாகத்தான் இந்த உலகத்தைவிட்டுச் செல்வோம் என்பதை அறியாத வனின் இதயம் குருடானது. ●



அருள்ஞான தந்தையின் 109வது ஜெயந்தி விழா

தவத்திரு, இராமதாஸ் அண்ணா அவர்களின் 109 வது ஜெயந்தி விழா 26.06.26 அன்று குடந்தை மேலக்கொட்டையூர் வள்ளலார் கல்வி அறநிலையங்கள், சாதானா நிகேதனில் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. காலை 5 மணிக்கு திருவருட்பா பாராயணத்துடன் துவங்கிய விழா, காலை சிறப்பான சிற்றுண்டியுடன் தொடர்ந்தது.

காலை 9.30 க்கு பேராசிரியர் ஜெ.மகேசன் அவர்களின் சிறப்பு சொற்பொழிவும், காலை 10.30 க்கு திருக்கோவிலூர் முனைவர் ஜீவ.ஜீனிவாச அய்யா அவர்களின், திருவருட்பா இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. நிகழ்ச்சியில் முன்னாள் மாணவர்கள் கலந்துகொண்டு இந்நாள் மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கி மகிழ்ந்தனர்.





அதைத்தொடர்ந்து தவத்திரு இராமதாஸ் அண்ணா அவர்களுக்கு சிறப்பு அலங்கார ஆராதனைகள் நடை பெற்று 12 மணிக்கு ஜோதி வழிபாடு நடத்தப்பட்டது. மதியம் 1 மணிக்கு விழாவில் கலந்து கொண்ட அனை வருக்கும் மிகச்சிறப்பான மாபெரும் அன்னதானம் வழங்கப் பட்டது.

விழா ஏற்பாடுகளை ஆஸ்ரம நிர்வாகிகளும், பொறுப்பாளர்களும் அண்ணாவின் தம்பி தங்கைகளும் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

நிகழ்ச்சிக்கு அண்ணாவின் அடிப்பொடிகள் பல ஊர்களில் இருந்து கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



அண்ணாவின் புகழ் வாழ்க!

சன்மார்க்கத் தொண்டு வளர்க!





ஸ்ரீ லட்சுமி குபேர ஹோமம்

சாய் தியானாலயா ஆத்மஞான பீடத்தின் 4 வது சாய் சங்கமம் நிகழ்ச்சி சென்ற 12.07.26 ஞாயிறு அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை 9 மணிக்கு செல்வி.அமிர்தா, செல்வி.அட்சயா ஆகியோரின் ஆத்மஞானப் பாடல், மற்றும், சாய் பஜனையுடன் விழா இனிதே துவங்கியது.

தொடர்ந்து குத்துவிளக்கு பூஜையும், சோதி தியானமும் நடைபெற்றது. காலை 11 மணிக்கு ஸ்ரீ லட்சுமி குபேர ஹோமம் தொடங்கி 1.30 க்கு பூரணாகுதியுடன் நிறைவடைந்தது. ஹோமத்தை ஸ்ரீ காயத்ரி புரோகித நிலையத்தின் புரோகிதரும், சோதிடருமான திரு. ராகவேந்திரன் அவர்கள் மிகச்சிறப்பாக நடத்தி வைத்தார்.











சாய் சங்கமம் மற்றும் ஹோம நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைவருக்கும் மதியம் சிறப்பு அன்னதானம் வழங்கப்பட்டது.

ஹோம நிகழ்ச்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கு நினைவுப்பரிசு வழங்கி கவுரவிக்கப்பட்டது. விழாவின் நிறைவுப்பகுதியாக, குரு யோகி ஸ்ரீராம் பாபா அவர்களின் பிரார்த்தனையுடன், பகவான் சாயிநாதரின் ஆசீர்வாதங்களுடன் சாய் சங்கமம் நிகழ்சி இனிதே நிறைவடைந்தது.

சாய்சங்கமம், மற்றும் ஹோமத்திற்கு உதவிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்புடன்,

சாய் தியானாலயா ஆத்மஞான பீடம்,

அயனாவரம், சென்னை–23.


மெய்வழிச்சாலை ஆண்டவர்

காதர்பாட்சா என்னும் இயற் பெயரை உடைய மெய்வழிச்சாலை ஆண்டவர், 1900த்தில், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள மார்க்கம்பட்டி என்ற சிற்றூரில், ஜமால் உசேன், பெரியதாயன்னை ஆகியாரின் மகனாகப் பிறந்தார். பெற்றோர் செய்துவந்த வேளாண்மைத் தொழிலோடு வியாபாரத்தையும் தொழிலாகக் கொண்டார்.

இளவயது முதலே சாதுக்கள், இறை நேர்கள், பக்கிரிகள் போன்றோர் மீது அன்பு கொண்டு உதவினார். ஆன்மீக நாட்டம் அதிகம் கொண்டிருந்த அவர், பிறப்பு, இறப்பு என்றால் என்ன, ஏன் பிறக்கிறோம், இறக்கிறோம், இறைவனை அடையும் வழி என்ன, சாதி மத பிரிவுகள் உள்ள மதத்தில் சரியான மார்க்கம் எது என்பது போன்ற சிந்தனைகளுக்கு விடை தேடி அலைந்தார்.

அதே காலகட்டத்தில் இஸ்லாமிய வழக்கப்படி அவருக்குத் திருமணம் ஆனது. இரண்டு ஆண் மற்றும் இரண்டு பெண் குழந்தை களுக்குத் தந்தையானார். நாளுக்கு நாள் ஆன்மீக நாட்டமும், தேடலும் அதிகரித்துக் கொண்டே இருந்தது.

பல குருநாதர்களைச் சந்தித்தார். யாரும் அவரது கேள்விகளுக்கு விடை கூற முன்வரவில்லை.



ஒருநாள், காசுக்காரம் பாளையத்தில் தணிகை வள்ளல் மணி என்பவரைச் சந்தித்தார். அவர் இவரது கேள்விகளுக்கு விரிவான விடை அளித்ததுடன், "உன் பிறப்பின் நோக்கம் என்ன என்பதையும் ஆராய்ந்து பார்" என்று கூறி ஆசி வழங்கினார். அதுமுதல் தனித்திருப்பதும், தன்னுள் தான் ஆழ்வதும், மெய்யைத் தேடி அலைவதும் காதர்பாட்சாவின் வழக்கமானது. நாளடைவில் குடும்பத்தை விட்டுப் பிரிந்தவர் தன் குருநாதரான தணிகை வள்ளல் மணியுடன்

யோகி ஸ்ரீராம் பாபா

சேர்ந்து பல இடங்களுக்குப் பயணப்பட்டார். குரு மெய்வழி ஆண்டவருக்கு தீட்சை அளித்து 'மார்க்கநாதர்' என்று பெயரிட்டார்.

குருவும் சீடரும் இணைந்து பல இடங்களுக்குச் சென்றனர். மார்க்கநாதர், குருவின் கட்டளைப் படி விருதுநகர் அருகில் உள்ள ரெட்டியபட்டியில் கவராநாயக்கர் என்பவரது வீட்டில் தங்கி ஓர் ஆண்டு ஆடு மேய்த்தார். ஓராண்டு முடிந்ததும் குருவின் கட்டளைப்படி மதுரை திருப்பரங்குன்றம் மலையில் உள்ள ஒரு குகையில் தங்கித் தவம்



செய்தார். தவத்தின் முடிவில் இறைவன் அருளால் அவருக்கு மெய்யறிவு கிட்டியது. தவத்தின் பயனாக உடுக்கை, சங்கு, சூலம், அங்குசம், வேல், தண்டாயுதம், கிள்நாமம் (தலைகீழ் பிறைவடிவில் உள்ள இலச்சினை) ஆகியவை கிடைக்கப்பெற்றார். ஞானபூரணம் அடைந்தபின் மார்க்கநாதர், தான் அடைந்த ஞானத்தை உலகமக்கள் பெற்று உய்யவேண்டிக் குருவால் தனித்து விடப்பட்டார்.

மார்க்கநாதர், மானாமதுரைக்கு அருகில் உள்ள ராஜகம்பீரம் என்ற இடத்தில் முதன்முதலில் ஆசிரமம் அமைத்தார். தான் உணர்ந்த உண்மைகளை மக்களுக்குப் போதித்தார். ஆனால், அங்கு எதிர்ப்பு ஏற்பட்டதால் காரைக்கால் சென்றார். சில வருடங்களுக்குப் பின் மீண்டும் மதுரை வந்தார். மதுரையில் அருப்புக்கோட்டை சாலையில் ஆசிரமம் ஒன்றைத் தோற்றுவித்தார். ஆசிரமத்தில் மண் சுவராலும் தென்னங் கீற்றாலும் அமைக்கப்பட்ட ஆலயம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது, அது 'சபை' என்று அழைக்கப்பட்டது. சபையில் மாணவர்கள் பலர் சேர்ந்தனர்.

அது இரண்டாம் உலகப் போர் காலக்கட்டம். ஆங்கிலேயர்களுக்கு இடநெருக்கடி ஏற்பட்டதால் அந்த ஆசிரம இடத்தைப் பெற விரும்பினர். வேவல்பிரபு மெய்வழி ஆண்டவரிடம் அவ்விடத்தைப் பெற முயன்றார். மார்க்கநாதர் அதற்கு ஒப்புக் கொண்டு ஆங்கிலேயரிடம் ரூ.1,35.000 பெற்றுக்கொண்டு ஆசிரமத்தைக் காலிசெய்தார். அத்தொகையை மதுரையில் தங்கமாக மாற்றி, கள்ளிப்பெட்டியில் அடைத்துக் கொண்டு தனது மாணவரது ஊரான புதுக்கோட்டை மாவட்டம் வேந்தன்பட்டிக்குச் சென்று தங்கினார்.

மார்க்கநாதர் புதிய ஆசிரமத்தை நிர்மாணிக்கப் பல இடங்களைத் தேடினார். இறுதியில், புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் வட்டம்

அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள விளத்துப்பட்டி கிராமம் பாப்பநாச்சிவயல் என்ற ஊரில் 100 ஏக்கர் நிலத்தை விலைக்கு வாங்கினார். 1942ல் அங்கு ஓர் ஆசிரமத்தை நிர்மாணித்தார். தென்னங் கீற்றாலும் மண்சுவராலும் அங்கு ஓர் ஆலயம் அமைக்கப்பட்டது. ஆசிரமவாசிகள், மாணவர்கள் தங்குவதற்காக வீடுகள் கட்டப்பட்டன. அந்த நகருக்கு 'மறலி கைதீண்டாச் சாலை என்னும் மெய்வழிச்சாலை' என்று பெயரிடப்பட்டது.

மார்க்கநாதர் அது முதல் மெய்வழி ஆண்டவர் என்றும், மெய்வழிச் சாலை ஆண்டவர் என்றும், ஸ்ரீ சாலை ஆண்டவர் என்றும் அழைக்கப்பட்டார். தனது அமைப்புக்கென தனிக் கொள்கை, நியதி, வழிபாட்டு முறைகளை ஏற்படுத்தினார். 'மறலி கைதீண்டாச் சாலை ஆண்டவர்கள் மெய்மதம்' என்ற மத அமைப்பாக அதனை உருவாக்கினார். 'மறலி கைதீண்டாச் சாலை ஆண்டவர்கள் மெய்மதம்' என்பதற்கு, 'மறலி என்றால் எமன். எமனால் அணுகப்பெறாத மெய்வழிச் சாலையைச் சேர்ந்த ஆண்டவர்கள் தோற்றுவித்த மெய்மதம்' என்று பொருள் கூறப்பட்டது.

இம்மதத்தில் இந்து, கிறித்தவர், இசுலாமியர் என்ற மத வேறுபாடின்றி 69 சாதிகளைக் கொண்ட பல்லாயிரக் கணக்கான மக்கள் சேர்ந்தனர். அவர்கள் மெய்வழிச் சாலை ஆண்டவரைத் தங்கள் கடவுளாக வழிபடுகின்றனர்.

மெய்வழிச்சாலையில் மின்சாரம் பயன்படுத்துவதில்லை. அரிக்கேன் விளக்குகள் மட்டுமே



பயன்படுத்தப்பட்டன. கால மாற்றத்திற்கேற்ப தற்போது சூரிய ஒளி விளக்குகளைப் பயன்படுத்துகிறனர். இங்கு ஆயிரத்திற்கும் அதிகமான வீடுகள் உள்ளன. இயற்கையோடு ஒன்றி எளிமையாக வாழ வேண்டும் என இம்மதம் வலியுறுத்துவதால் இங்குள்ள வீடுகள் அனைத்து மே தென்னங்கீற்றுகளால் அமைக்கப் பட்டுள்ளன.



மெய்வழிச்சாலையில் வீடுகளுக்குக் கதவுகள் இருப்பதில்லை. இருந்தாலும் அவை பூட்டப்படுவதில்லை. வீட்டின் சுவர்கள் ஐந்து அடி உயரம் மட்டுமே இருக்கும். வீடுகள் மாடி வைத்துக்கட்டப் படுவதில்லை. வீடுகளுக்கு வெள்ளை நிறச் சுண்ணாம்பு அடிக்கப்பட்டிருக்கும். வீடுகளில் கழிவறை இருக்காது. அவை, ஊருக்கு ஓதுக்குபுறமாக இருக்கும். ஊருக்குள் யாரும் நாய் வளர்ப்பதில்லை. எந்த ஆடம்பரத் துக்கும் இங்கு இடமில்லை.

மது, சிகரெட், சினிமா, டிவி ஆகிய வைகளுக்குத் தடைவிதிக்கப் பட்டுள்ளது. இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர் எனப் பல மதத்தைச் சேர்ந்தவர்கள் மெய்வழி மதத்தில் இணைந்துள்ளனர். ஆனால் இங்கு தீபாவளி, ரம்ஜான், கிறிஸ்துமஸ் போன்ற பண்டிகைகள் கொண்டாடப் படுவதில்லை. இயற்கையைப் போற்றும் விதமாக பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. உலகின் எந்த மூலையில் இருந்தாலும், மெய்வழிச் சாலை அன்பர்கள் அந்த நாளில் அங்கு வந்து கூடி விழாவைக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

மெய்வழிச்சாலை கிராமத்தில் ஏற்றத் தாழ்வுகள் கிடையாது. மதப்பிரிவுகள் இல்லை. ஜாதிப் பிரிவுகள் கிடையாது, உயர்ந்தவர் தாழ்ந்தவர் இல்லை. கூலித் தொழிலாளிகளும், செல்வந்தர் களும், எந்தவித ஏற்றத்தாழ்வுமின்றி, எந்தப் பாகுபாடுமின்றி, அன்பாகவும் மரியாதையாகவும் நடந்து கொள்கின்றனர். இரு நபர்கள் சந்தித்துக் கொள்ளும்போது இரு கைகளையும் காதுவரையில் உயர்த்தி நமஸ்காரம் என்று மரியாதை செலுத்துகின்றனர்.

இம்மதத்தின் விதிமுறை களின்படி ஆண்கள் மதத்தின் வேதங்களைப் பயில வேண்டும். காவி வேட்டியை தார்ப்பாய்ச்சிக் கட்ட வேண்டும். தலைப்பாகை அணிய வேண்டும்


அதில் பிறை குத்திக் கொள்ள வேண்டும். பெண்கள் வழிபாடு

நேரத்தில் மட்டும் முக்காடு போட்டுக் கொள்ள வேண்டும். சிறுவர்கள் தொடங்கி முதியவர்கள் வரையிலும் அனைத்துத் தரப்பினரும் தலையில் எந்த நேரமும் வெள்ளை டர்பன் அணிந்திருக்கின்றனர். இந்த மதத்தைச் சேர்ந்த ஆண்கள் அனந்தர்கள் என்றும் பெண்கள் அனந்தகிகள் என்றும் புதிதாக இம்மதத்தைத் தழுவியவர்கள் நன்மனத்தவர் என்றும் அழைக்கப் படுகிறனர். தலைமுறை தலைமுறை யாக இம்மதத்தைப் பின்பற்று கின்றனர்.

இங்கு வசிப்பவர்கள் இறந்தால் முகம் மஞ்சள் நிறத்தில் மாறும். கை, கால்கள் உறைந்து போகாது, கோவிலில் இருந்து கொடுக்கப்படும் தீர்த்தம் இறந்தவரின் வாயில் ஊற்றும்போது அது வெளியே வராமல் உள்ளே சென்றுவிடும் என்பது போன்ற அனுபவ நம்பிக்கைகள் இங்கு உள்ளன. கணவனை இழந்த பெண்கள் தாலியைக் கழட்டுவதில்லை. பூ, பொட்டு வைத்துக்கொள்கின்றனர். கணவன் இறந்த பிறகும் இந்த ஊர்ப் பெண்கள் சுமங்கலிகளாகவே வாழ்கின்றனர். ஒருவர் இறப்பிற் காக யாரும் அழுவதோ, அஞ்சு வதோ, பிரிவிற்காக ஏங்குவதோ இல்லை. மெய்வழியின் படி அவர்கள் வீடடைந்ததாகவே கருதப்படுகின்றனர். ●

குற்றவியல் வழக்கு

மும்பாயில் உள்ள ஒரு பிரபலமான நிறுவனத்தின் காசாளர் ஒரு பெரிய தொகையை மோசடி செய்திருந்தார். அவர் சீரடிக்குச் சென்று அங்கு அடைக்கலம் ஆகிவிட்டார்.அவரைக் கைது செய்வதற்கான வாரண்ட் பிறப்பிக்கப் பட்டது. மேலாளரும் பாபாவின் பக்தர். காசாளரை அவர் தீவிரமாகத் தேடினார், ஆனால் குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. விரக்தி யில், சீரடிக்குச் சென்று பாபாவின் முன் விஷயத்தை வைக்கலாம் என்று நினைத்தார்.




எனவே அவர் பாபாவின் தரிசனத் திற்காக சீரடிக்குச் சென்றார். அங்கு அவர் மிகவும் ஆச்சரியப்படும் விதமாக, தலைமறைவான காசாளர் பாபாவின் கால்களை பிடித்து விட்டுக் கொண்டிருப்பதைக் கண்டார். மேலாளரைப் பார்த்ததும், காசாளர் பாபாவின் முன் சாஷ்டாங்கமாக விழுந்து, தன்னைக் காப்பாற்றும்படி கெஞ்சினார்.

பாபா, முழு விஷயத்தையும் ஒப்புக் கொண்டு மன்னிப்பு கேட்கும்படி கூறினார். காசாளர் பாபாவின் வார்த்தைகளை நிறைவேற்றினார். இதனால் காசாளர் வழக்கிலிருந்து காப்பாற்றப்பட்டார்.

"என்னிடம் அடைக் கலம் தேடி, வழியிலேயே கைவிடப்பட்ட யாரையா வது எனக்குக் காட் டுங்கள்", என்ற சாய் பாபாவின் உறு தி மொழிக்கு சாட்சியாகிப் போனார் காசாளர்.

‘குருவருள்’



அரக்கன் என்றாலே கொடூர மானவன், இரக்கமற்றவன், என்ற சிந்தனை எழும் அதை சார்ந்தே புராணங்களிலும் வடிவமைக் கப்பட்டிருக்கும். குறிப்பாக தேவர்களுக்கும் அரக்கர்க ளுக்கும் இடையே நடக்கும் போராட்டங்களை மையமாக வைத்தே கதைகளை அமைத்திருப் பார்கள். அவர்களை அழிப்பதற் காகவே கடவுள் அவதாரம் எடுப்ப தாகவே கதைகளில் கூறியிருப்பர்.

ஆனால் இலக்கியங்களில் அரக்கர்களை தீயவர்களாக காட் டாமல் அவர்களின் வீரம், அறிவு, மற்றும் பக்தி ஆகியவற்றையும் விவரிக்கின்றனர். நம் நாட்டில் அரக்கனை கொன்ற நாளை விழா வாக கொண்டாடும் அளவிற்கு கதை களை அமைத்து மக்கள் மனதில் தொடர்ந்து ‘அரக்கத்தனத்தை’ பதிவு செய்து வருகிறார்கள்.

சக மனிதன் செய்யும் தீய செயல் களால் அவனை அரக்கன் என்று

சொ. அகஸ்டின்



கூறுவதை மகான்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்வதில்லை. மாறாக அச்செயல்களை பொறுத்து அவன் அறியாமையால் செய்கிறான் அல்லது அகங்காரத்தால் செய்கிறான் என்றே கருதுகிறார்கள்.

1924 ஆம் வருடம் ஜூன் 26 தேதியன்று இரமணாசிரமத்திற்குள் மூன்று திருடர்கள் திருடுவதற்காக இரவு 11.30 மணியளவில் சன்னல் கண்ணாடிகளை உடைக்கின்றனர் இதை கவனித்த பகவான் இரமணர் கதவு திறந்து தான் இருக்கிறது உள்ளே வந்து வேண்டியதை எடுத்து செல்லுங்கள். தேவையில்லாமல் சன்னல்களை உடைக்க வேண்டாம் என்று கூறினார்.

இரமணர் பேசுவதை கேட்டு ஆசிரம ஊழியர்களும் விழித்துக் கொண்டு திருடர்களை பிடித்து கட்டிப்போடுகின்றோம் என்று சத்தம் போட்டனர். ஆனால் பகவனோ, வேண்டாம்! அவர்கள் ஏதோ அறியாமையால் செய்கிறார்கள் நாம் நமது தர்மத்தில் இருந்து தவறக்கூடாது பொறுமையுடன் அமைதியாக இருக்க வேண்டும் அவர்களை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று பகவான் இரமணர் அவர்களை தடுத்து விடுகிறார்.

வேறுவழியில்லாமல் பக்தர்களும் ஊழியர்களும் அமைதி காத்து அத்திருடர்களிடம் கட்டிடத்தை சேதப்படுத்த வேண்டாம் உள்ளே சென்று வேண்டியதை எடுத்துச் செல்லுங்கள் என்று கேட்டுக் கொண்டனர். ஆனாலும் அம்முரடர்கள் அவர்கள் கூறுவதை ஏற்காமல் குடிசைகளுக்கு தீ வைப்பதாக மிரட்ட அப்படி ஏதும் செய்ய வேண்டாம் நாங்கள் அனைவரும் வெளியே சென்று விடுகிறோம் நீங்கள் உள்ளே சென்று தேவையானதை எடுத்துக்கொள்ளுங்கள் என்று இரமணர் கூறினார்.

அதன்படி, ஒவ்வொருவரையும் பிரம்பால் பலமாக அடித்து வெளியே அனுப்புகிறனர் திருடர்கள். அதில் இரமணரும் தப்பவில்லை அவருக்கு இடது தொடையில் அடி விழுகிறது. பிறகு உள்ளே சென்று சல்லடை போட்டு ஆராய்ந்ததில் கிடைத்தது பத்து ரூபாய் மட்டுமே! அதிலும் ஆறு ரூபாய்தான் ரொக்கம்.

திருடர்களுக்கு இது பெரிய ஏமாற்றம்.

இதனால் விரக்தி ஏற்பட்டு கோபத்துடன் பகவான இரமணரை மீண்டும் தாக்க முயற்சிக்க, அதைக்கண்ட பக்தர்களும் ஊழியர்களும் வெகுடெழுந்து கையில் கிடைத்த கட்டைகளை எடுத்துக் கொண்டு திருடர்களை தாக்க புறப்பட்டனர்.

இரமணர் அவர்களை தடுத்து, அவ்வாறு செய்ய கூடாது, நாம் சாதுக்கள். நமது தர்மத்தை கைவிடலாமா! நீங்கள் அவர்களை தாக்கி ஏதாவது உயிர் சேதம் ஏற்பட்டால் அப்பழி நம்மீதே விழும். அவர்கள் அறியாமையில் செய்கிறார்கள் அறிந்த நாம் நமது தர்மத்தை கைவிடலா மா? சில சமயங்களில் நமது நாக்கை நாமே கடித்துக் கொள்கிறோம் அதற்காக பல்லை உடைத்துவிடுகிறோமா என்ன? இவ்வாறு திருடர்களிடம் உள்ள அரக்க குணத்தை அறியாமை என்றும் அந்நேரத்தில் பக்தர்கள் கடைப்பிடிக்க வேண்டியதை தர்மம் என்றும் உபதேசமாக கூறுகிறார் "பகவான் இரமண மகரிஷி".

அதுபோலவே கடந்த 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18 ஆம் தேதி 'யோகி ஸ்ரீராம் பாபா' தலைமையில் 26 நபர்களுடன் சீரடி யாத்திரைக்குப் புறப்பட்டோம். யாத்திரையில் கோவையை சேர்ந்த குணசேகர் என்ற நபர், பாபா பக்தர் என்ற முகமூடி அணிந்து எங்களுடன் பயணத்தில் கலந்துகொண்டார். சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தில் அனைவரும் ஒன்றிணைந்த பின்பு நம் குரு ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்து வைத்தார். அப்போது அந்நபர் மிக பவ்யமாக அனைவரிடமும் தன்னை அறிமுகம் செய்து கொண்டு பாபா அனுமதித்தால் இம்மாதிரியே தானும் சேவை செய்வேன் என தன்னடக்கத்துடன் கூறிகொண்டார்.

இரயில் புறப்படுவதற்கு முன்பாகவே அனைவரிடமும் கலகலப்பாக பேசி அனை வரது விவரங்களையும் சேகரித்துக் கொண்டார். அதன்பின்பு இரயில் புறப்பட்டதும் அவரின் பேச்சு தன்னை முன்னிலைபடுத்துவதிலே இருந்தது குழுவில் அவரே மூத்த வயதுடையவர் என்பதால் அனைவரிடமும்

அதிகாரத்துடன் பேசி குரு தனக்கு மிகவும் வேண்டியவர் என்றும், நாங்கள் பல காலமாக நண்பர்கள் என்றும் பேசி வந்தார். இதை அனைத்தையும் கவனித்த படியே மௌனமாக நம் குரு பயணம் செய்திருக்கின்றார்.

மறுநாள் காலை 12.00 மணியளவில் சீரடிக்குச் சென்றோம். அவரவருக்கு ஒதுக்கப்பட்ட அறைக்கு சென்று தங்களுடைய லக்கேஜ் வைத்துவிட்டு உணவருந்த கீழே இறங்கவும் என்று குரு கூறினார். அதற்குள் அந்த நபர் குருவிடம் எண்ண கேட்டார் என்று தெரியவில்லை. அதற்கு குரு, முதலில் உங்கள் அறைக்கு சென்று சற்று ஓய்வெடுத்துக்கொண்டு வந்து உணவு அருந்துங்கள். பிறகு கூறுகின்றேன் என்றார்.



அவர் அதை காதில் ஏற்றுக்கொள்ளாமல், நான் யார் தெரியுமா? எனக்குண்டான மரியாதையை உங்கள் குழுவினர் எனக்கு தரவில்லை என்று குருவிடம் கூற, குருவின் ரௌத்திரம் வெளிப்பட்டது. நீங்கள் யாராக இருந்தால் எனக்கென்ன? பயண விதிமுறைகளை அறிந்து கொண்டுதானே யாத்திரை வந்தீர்கள். இந்த யாத்திரைக்கு நான் தான் தலைவர். நான் கூறுவதைத் தான் நீங்கள் கேட்க வேண்டும். என்று மிகக்கடுமையாக கூற, குருவின் ரௌத்திரத்தை முதன் முதலாக அன்று கண்டேன்.

ஓர் அரக்கனை அழிக்க நினைத்தால் எவ்வாறு உடல் மொழியோடு வார்த்தைகள் வருமோ அவ்வாறு குருவிடம் இருந்து வந்தது. நாங்கள் அனைவரும் திகைத்து நிற்கிறோம். எனக்கு மிகுந்த ஆச்சரியம் அவ்வாறு நான் குருவை அதுவரை பார்த்ததேயில்லை. அவரை கொன்று விடுவேன் என்று கூற வில்லை அவ்வளவு தான் அதற் குண்டான வார்த்தைகள் வந்துவிட் டதை கண்டு திகைத்து நின்றேன்

சத்தத்தை கேட்டு அங்கிருந்து ஓடிவந்த ஹோட்டல் மேலாளர், குருவோடு உள்ள நட்பினால் அந்த நபரைத்திட்டி அவருக்குண்டான தொகையை கொடுத்து அனுப்பிவிட்டார். அந்நபர் புறப்படும் முன் நான் யார்னு தெரியாம பேசிட்டிங்கல பார்த்துக்கொள்கிறேன் என்று கூற, குருவிற்கு இன்னும் கோபம் கூடியது 'உன்னை அழிக்காம விட மாட்டேன்' என்று கோபப்பட்ட குருவை ஹோட்டல் மேலாளர் ஆசுவாசப்படுத்தி சாப்பிட அழைத்து சென்றார்.

புயலுக்கு பின் அமைதி நிலவியதை போல அவ்விடம் அமைதியானது. பிற்பாடுதான் குரு கூறினார். அந்நபர் கோவையில் இதுபோலவே பலபாபா பக்தர்களை சீரடிக்கு அழைத்துச்செல்வதாக கூறி அனைவரிடமும் பணம் பெற்றுக்கொண்டு ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார். இம்மாதிரி யாக பாபாவின் பெயரைக்கூறி பணம் பறிப்பவர்களிடம் நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இதை நம் குழுவினரிடமும் செய்வதற்குத்தான் ஒரு நாள் முழுவதும் எனக்கு மிகவும் தெரிந்தவர்போல் உரிமையுடன் உங்களிடம் வலம் வந்து கொண்டிருந்தார். சமயம் வரட்டும் என்றுதான் காத்துக் கொண்டிருந்தேன் என்றார் குரு.

பயணம் முடிந்து வீடு திரும்பிய பிறகு குருவின் ஞாயிறு சத்சங்கத்தில் கலந்து கொண்டேன். சீரடியில் அந்த நபருக்கும், குருவிற்கும் நடந்த

நிகழ்வின் போது குரு பேசிய கடுமையான வார்த்தைகளே என் காதில் ஒலித்து கொண்டிருந்தது. இதை குரு எப்படித்தான் கவனித்தாரோ தெரியவில்லை. அப்போது குரு ஒரு கதை சொன்னார். ஓர் பக்தர் ஒருவர் திருவண்ணாமலையில் கிரிவலம் செல்வதற்கு முன் அங்கிருந்த சேஷாத்திரி மகானிடம் உபதேசம் பெற்றுவிட்டு செல்லலாம் என நினைத்து அவரிடம் சென்று ஆசிபெற்று, அருகில் இருக்கும் இரமணரை பார்த்துவிட்டு கிரிவலம் செல்கிறேன் என்று கூறி புறப்பட்டாராம்.

அதற்கு சேஷாத்திரி மகான் அவன்கிட்டயா போற போ, போ, அவன் உன்னை கொல்லாமால் விட மாட்டான் என்றாராம். அந்த பக்தருக்கு ஒன்றும் புரியவில்லை. இரமணாசிரமம் நெருங்க நெருங்க பயம் அதிகமாகி அங்கு செல்லாமலே கிரிவலம் புறப்பட்டாராம். அது எப்படி அவர் கொல்லுவார் என்ற சிந்தனை எனக்குள் எழுந்ததை மீண்டும் உள்வாங்கிய குரு கதையை விவரித்தார் உன்னை கொல்லாமல் விடமாட்டான் என்று சேஷாத்திரி கூறியது இவ்வுடலை அல்ல உடலில் மறைபொருளாக இருக்கும் 'நான்' என்ற அகங்காரத்தை என்றார்.

அப்போது தான் எனக்கு புரிந்தது 'யோகி ஸ்ரீராம் பாபா' அவர்கள் சீரடியில் குணசேகரை கண்டித்ததும் உன்னை அழிக்காமல் விடமாட்டேன் என கூறியதும் அவரை அல்ல, அவருக்குள் இருக்கும் நான் என்ற அகங்காரத்தைதான் என்பதை சத்சங்கம் வாயிலாக அறிந்து கொண்டேன் மேலும் இம்மாதிரியான அரக்க குண நபர்களை அணுகும் போதெல்லாம் அவர்கள் அகங்காரத்தால் செய்கிறார்கள் என்பதை உள்வாங்கி அதற்கேற்றார் போல் பல்வேறு யுக்திகளை கையாள்கின்றனர் என்பதும் அப்போது தான் எனக்கு புரிந்தது.

மேலும், தன்னை நாடி வரும் ஒவ்வொருவரின் நிலையை நான் பார்ப்பதில்லை. மாறாக அவர்களின் ஆன்மாவையே பார்க்கிறேன். அதை நீங்களும் உணர்வதற்கு உண்டான வழியை தான் சத்சங்கம் மூலமாக நான் உங்களுக்கு விவரிக்கிறேன் என்று கூறினார்.


எனவே குருவின் வார்த்தைகளும், செயல்களும் நாம் நினைப்பதைப் போன்று சாதாரணமானவை அல்ல. அவை சூட்சுமமானவை. குரு ஒருவர் 'உன்னைக் கொன்று விடுவேன்' என்றால் நாம் நினைக்கின்ற பொருளில் குரு கூறுவாரா என்று சற்றே கூர்ந்து யோசித்தால் அதற்கு நாம் நினைக்கின்ற பொருள் இல்லை. அதற்குள் ஆயிரமாயிரம் அர்த்தங்கள் இருக்கும் என்பதை உணர்ந்து கொள்ளலாம் அல்லவா?

அர்த்தம் பொதிந்த வார்த்தைகளுக்கு நாம் நம்முடைய நிலையில் இருந்து அர்த்தம் பண்ணிக்கொள்வது மாபெரும் தவறு என்று இந்த சந்தர்ப்பங்கள் மூலம் நான் நன்குணர்ந்துகொண்டேன்.

குருவின்றி ஆன்மீக சாதனை என்பது ஆன்மீகப் பாதையில் ஒரு நுண்ணிய அபாயமாகும். சித்தர் மரபில் ஆன்மீகம் என்பது வெறும் தத்துவக் கோட்பாடு அல்ல, அது ஒரு உணர்வுநிலை அறிவியல். அந்த அறிவியலின் அடிப்படை விதியே "அனுபவம் வழிகாட்டும்,குரு திருத்துவார்." என்பதாகும்.

இந்து சமய ஆன்மீகத்தின் எந்த மரபை எடுத்தாலும் ஒரு உண்மை மீண்டும் மீண்டும் வலியுறுத் தப்படும். அது தன்னிச்சையாகச் செயல்படும் 'மனம்' தான் முதலில் மாற்றப்பட வேண்டிய கருவி.

ஆனால், நவீன சாதகர்கள் பலரும் இதற்கு நேர்மாறாகச் சிந்திக்கிறார்கள்: "எனக்குத் தெரியும், நான் வாசித்திருக்கிறேன், நான் உணர்கிறேன். எனக்கு



குரு இல்லா வித்தை

வழிகாட்டுதல் எதற்கு?" என்றே தொடங்குகின்றார்கள்.

இங்குதான் பலபேருக்கு ஆன்மீகப் பயணம் தொடங்குவதற்கு முன்பே, அகங்காரம் தனது ஆன்மீக ஆடையை அணிந்து ஆட்டத்தைத் தொடங்குகிறது.

குருவைத் தவிர்த்துத் தானாகவே சாதனை செய்யும் மாணவன் தீயவன் அல்ல, அவன் தேடுபவன் தான். ஆனாலும் அவன் தவறான திசையில் பயணிக்கிறான். இவர்களின் மனநிலை பொதுவாக மூன்று நிலைகளில் சிக்கியிருக்கும் என்று மெய்ஞானிகள் கணித்திருக்கின்றார்கள்.

முதலாவதாக நிறைய நூல்களைப் படித்து மந்திரங்கள், சக்ராக்கள், குண்டலினி எனப் பல தகவல்களைச் சேகரித்து 'அறிவின் அகங்காரத்தில்' இருப்பார்கள். இவர்கள் தேடுவது ஞானத்தை அல்ல, அறிவின் மூலம் கிடைக்கும் 'கட்டுப்பாட்டை' குருவிடம் சரணடைந்தால் தனது 'எல்லாம் தெரிந்தவர்' என்ற பிம்பம் உடைந்து விடுமோ என்ற ஆணவத்தில், குருவை மதித்தாலும் அவரிடம் எதையும் கேட்க மாட்டார்.


இரண்டாவது நபர்கள், பயிற்சியின் போது உடலில் ஏற்படும் வெப்பம், அதிர்வு, கண்ணீர் அல்லது சில கனவுகளைக் கண்டு, "எனக்கு ஏதோ நிகழ்கிறது, அதனால் நான் சரியான பாதையில் இருக்கிறேன்" என்ற 'அதிசய அனுபவத்தில்' இருப்பார். ஆனால் சித்தர் மரபு சொல்வது, "அனுபவம் என்பது முடிவல்ல, அது மனதின் ஒரு எதிர்வினை மட்டுமே." குரு இருந்தால் அந்த அனுபவத்தைக் கடந்து செல்லச் சொல்வார். குரு இல்லை என்றால் மாணவன் அனுபவத்தையே இலக்காக்கி அங்கேயே தேங்கி விடுகின்றான்.

மூன்றாவதாக தான் செய்யும் ஏதோ ஒன்று தவறு என்று குரு சுட்டிக்காட்டிவிட்டால் என்ன செய்வது என்ற 'மறைமுக பயம்' மாணவனுக்குள் இருக்கும். இதனால் குருவிடம் ஒரு பகுதி உண்மையை மட்டுமே பகிர்ந்து கொள்வார். இந்த ஒளிவுமறைவு ஆன்மீக வளர்ச்சியின் பெரும் தடையாகும்.

தனக்கு ஏற்படுவது ஆனந்தமா, சக்தியா அல்லது பிரமையா என்ற அளவுகோல் மாணவனுக்கு இருக்காது. வழிகாட்டுதல் இல்லாத அனுபவம் வெறும் மாயையாக முடிந்துவிடும். இது சாதாரண அகங்காரத்தை விட ஆபத்தானது. "எனக்கு எல்லாம் புரிந்து விட்டது" என்று நினைக்கும் கணமே ஒருவனின் ஆன்மீக வளர்ச்சி முற்றுப்பெறுகிறது. இத்தகையவர்கள் மற்றவர்களைத் தாழ்வாகக் கருதத் தொடங்குவார்கள்.

பிராணாயாமம், தந்திரம் போன்ற பயிற்சிகள் நரம்பு மண்டலத்தோடும் ஆற்றல் வளையங்களோடும் நேரடியாகத் தொடர்புகொள்பவை. முறையான மேற்பார்வை இன்றி இவற்றைச் செய்யும்போது தூக்கமின்மை, தேவையற்ற பயம், உணர்ச்சி வசப்படுதல் அல்லது ஒருவித 'துறவுப் பைத்தியம்' போன்ற நிலைகள் ஏற்படக்கூடும்.

குரு இல்லாத சாதகர் அனுபவத்தை இலக்காகவும், சோம்பலைச் சமாதி நிலையாகவும்,



வெறும் அமைதியை அடக்கமாக வும் தவறாகப் புரிந்து கொள்வார். குரு என்பவர் வெறும் பாடங்களை நடத்துபவர் அல்ல. மாணவன் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளும் இடங்களைச் சுட்டிக் காட்டுபவரே குரு. மாணவன் காணத் தவறும் சில விஷயங்களை குரு துல்லியமாகப் பார்க்கிறார்.

அனுபவத்தின் பின்னால் மறைந்துள்ள ஆசை. அமைதிக்கு பின்னால் ஒளிந்துள்ள பயம். பக்தியின் பின்னால் இருக்கும் அடையாளத் தேவை. குரு வழிகாட்டுவது உங்களின் 'சாதனை முறையை' அல்ல, உங்களின் 'மனதின் மறைமுக இயக்கத்தை'.

சிஷ்யன் என்பவன் குருவுக்குக் கீழ்ப்படிந்து அடிமையாக இருப்ப வன் அல்ல. குருவிடம் தனது அனுப வங்களைச் சரியாகவோ தவறாகவோ தற்காத்துப் பேச முயலாதவனே நல்ல சீடன். தவறு என்று உணர்த்தப்பட்டால் கணம் இன்றித் திருத்திக்கொள்வான்.புரியாததை மறைக்க மாட்டான். அவன் குருவிடம் பேசுவது அறிவைப் பெறுவதற்காக அல்ல, தன்னைத் தவறான பாதையிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவே!

ஆன்மீகப் பாதையில் மிகப் பெரிய தடை பாவமோ அல்லது அறியாமையோ அல்ல, தனது அறியாமையையே தனக்கு வழிகாட்டியாக்குவதுதான்.

"தியானம் செய்யும் முன் மனதை குருவிடம் ஒப்படை, இல்லையெனில் உனது மனமே உனக்கு குருவாகி உன்னைத் தவறாக வழிநடத்தும்."

ஆன்மீகம் ஒரு தனிப்பயணம் தான், ஆனால் அது தனியாகச் செய்யும் பயணம் அல்ல. குரு அறிவுக்காகத் தேவைப்படுவதில்லை, உங்களின் பாதுகாப்புக்காகத் தேவைப்படுகிறார். ●

வாழ்வியல் நெறிகாட்டும் மெய்ஞானம் 16

சில சூன்யவாத ஆகமங்கள், இந்த உலகமானது தானாகவே தோன்றியது என்றும், படைத்தவன் என்ற ஒருவன் இல்லையென்றும் கூறுகிறது. மண் பானையானது, குயவன் என்ற ஒருவனால், மண் என்கிற மூலப்பொருளால் உருவாகிறது. இதேபாணியில், இந்த பிரபஞ்சமாயாகிய உலகம் உருவானதற்கான மூலப்பொருள் எங்கே? அது எங்கிருந்து கிடைத்தது? படைத்தவன் யார்? என்பதே அந்த குதர்க்க வாதிகளின் கேள்வியாக உள்ளது.

ஓர் அறிவுகொண்ட ஒரு சிறிய சிலந்திப்பூச்சிதன்னுடையவலையை பின்னுவதற்கு வெளியிலிருந்து மூலப்பொருள்களை பெறுவ தில்லை. தன்னுடைய உமிழ்நீரி லேயே தான் வாழ்வதற்கான வலையை உருவாக்கிக் கொள்கிறது. அப்படியிருக்க, புல், பூண்டி லிருந்து ஆரம்பித்து இந்த உலகமனைத்தையும் உருவாக்கிய இறைசக்திக்கு மூலப்பொருள் என்ற ஒன்று வெளியிலிருந்து தேவைப் படுமா? அப்படி பெறவேண்டிய அவசியம்தான் என்ன? ஆகவே, படைத்தவன் இல்லை என்று கூறுகின்ற அபத்தவாதிகளின் ஆகமங்களையும், கூற்றுகளையும் ஒதுக்கித்தள்ளிவிடவேண்டும்.



உலகத்தில் நடைபெறுகின்ற அசாத்தியமான, செயற்கரிய செயல்களை எல்லாம் பார்க்கும் பொழுது இறை சக்தியின் ஆற்றலானது அபாரமானது என்பதனை நாம் உணரலாம். அந்த இறைசக்தியை ஞானத்தினால் அறிந்து சரணடைந்தவர்களை அது என்றும் கைவிடுவதில்லை, ஆனால் நமக்கு தேவையென்ற ஒன்றை துறக்கும்போது அந்த இறைசக்தியே நம்தேவையை நிறைவேற்றிவைக்க தவறுவதில்லை.



நாராயணன்

பொருள் ஆசைகளாலும், பொருந்தாத மார்க்கங்களினாலும் அதனை அடைய முடியாது. இறை சக்தியானது அவரவரது கர்மநியதி களின்படியே பலனைக் கொடுக்கின்றது. அதுவே ஆசைகளை அகற்றி, விருப்பு வெறுப்பின்றி இதயவெளிக்குள், தியானத்தின்மூலம் உபாசிப்பவனின் தேவைகளை இறைசக்தியே பூர்த்திசெய்கின்றது.

அந்த இறையை, பிரபஞ்ச சக்தியாகிய உண்மைப் பரம்பொருளை அறியமுயலுகின்ற வர்களுக்குப் பூர்ணத்துவைத்தை அளிக்கிறது. முயற்சியற்ற மூடர்களுக்கு மட்டுமே பிராரப்த கர்மாவும், கர்மநியதிகளும் எப்போதும் உண்டு. அப்பேற்பட்ட இறைசக்தியை அடைய முயற்சி செய்வதே இந்த மானிடப்பிறப்பின் நோக்கமாகும். என்று கூறி முடித்தாள் ஹேமலேகை.

ஹேமலேகை கூறியவற்றை கேட்ட ஹேமசூடன் பின்வருமாறு வினவினான். "பிரியமான வளே! நீ கூறுகின்ற நிர்குணப் பிரம்மத்தை என்னால் அடையாளம் காண முடியவில்லை. மதபேதங்களால் பிளவுற்று, பற்பல உருவங்களை கடவுளாக உருவகித்து, அதற்கு சிவன் என்றும், விஷ்ணு என்றும், கணேசன் என்றும், முருகன் என்றும், இன்னும் சிலர் சூரியன் என்றும், வேறு சிலர் மஹாகாளி, மகாலக்ஷ்மி, மஹாசரஸ்வதி என்றும் இந்த பட்டியலானது நீண்டுகொண்டே செல்கிறது.

இதில் எவரை பிரம்மம் எனக்கொள்வது நாம் வளர்ந்தவிதமானது சகுனப் பிரம்மத்தை அனுசரித்தே அல்லவோ? வேறுசில கற்றறிந்தவர்களோ பிரம்மம் என்பது கண்ணுக்குத் தெரியாத அணுவென்றும், பிராணன் என்றும் கூறுகின்றனர். நீ கூறிய பிரம்மத்தின் சொரூபமானது இப்படியெல்லாம் கூறப்பட்டுள்ளது. இவர்களில் எவரிடம் என்மனதை லயிக்கச் செய்வது? இதற்கான வழியை உன்னால் மட்டுமே கூறமுடியும் ஏனென்றால் நீ சிறந்த ஞானியான ஸ்ரீவியாக்ரபாத மஹரிஷியின் மகளும், அவரின் ஞானத்தால் வளர்க்கப்பட்டவளும் ஆவாய், அதனால் உன்னிடம் கேட்கின்றேன்" என்றான் ஹேமசூடன்.

ஹேமசூடன் கூறிய வார்த்தைகளை கேட்ட ஹேமலேகை மகிழ்ச்சி பொருந்தியவளாய், "அரசே! உங்களுக்கு பிரம்மத்தின் சொரூபவர்ணையை சொல்லுகின்றேன் பொறுமையாக, கவனத்துடன் கேளுங்கள். இந்த உலகத்தின் உற்பத்திக்கும், முடிவுக்கும் காரணமானது பிரம்மமே. அதுவே, ஈஸ்வரனாகவும், விஷ்ணுவாகவும், பிரம்மாவாகவும், ஏன் சூரிய, சந்திரர்களாகவும் பரிமளிக்கிறது. இந்த பிரம்மம் எல்லாவற்றிலும் எல்லாமாகவும் ஏன் நம்முள்ளும் உள்ளது. அதனால் தான், "அகம் ப்ரஹ்மாஸ்மி" "நானே கடவுள்" என்றுரைக்கப்படுகின்றது. இங்கு "நான்" என்பது "ஆன்மா" உடம்பு அல்ல என்ற புரிதல் வேண்டும். அதுவே ஞானம்.

ஆனால், நீங்கள் கூறும் உருவத்திற்குள் அடங்குகின்றவன் பிரம்மம் அல்ல. இந்த பிரம்மம் சர்வவியாபி, எங்கும் நிறைந்தவன், எதிலும் உறைபவன். ஓர் உயிர் தொடங்கி தாவரம், ஜங்கமம், உன்னுள், என்னுள் என்று அனைத்திலும் இருப்பவன். அவனை அறிந்தால் அனைத்தையும் அறிந்ததற்குசமம், அவனை அறிவதே உண்மையான ஞானம், அதுவே நம் தேடலாகவும் இருக்க வேண்டும். அதற்காக அருளப்பட்டதே இந்த மானிடப்பிறவி.

இதன் உண்மையை விளக்குகிறேன் கேளுங்கள். சைவர்கள் பிரம்மத்தை முக்கண் மூர்த்தி, ஐந்து முகங்கள் கொண்ட சதாசிவன் என்றார்கள். வைணவர்களோ பாற்கடலில் ஆதிசேஷனில் பள்ளி கொண்டிருக்கும் மஹாவிஷ்ணு என்கிறார்கள். சாக்தர்களோ மஹாசக்தி, ஆதிபராசக்தி, ஜகன்மாதா என்கிறார்கள்.

இப்படியாக இவர்கள் பிரம்மத்தை தாங்கள் அபிமானிக்கின்ற தேவதையாக உருவத்துக்குள் கொண்டுவந்து அடக்குகின்றார்கள். ஆனால், இந்த பிரம்மம் இவைகளுக்கு எல்லாம் அப்பாற் பட்ட ஒன்று என்பதனை அவர்களால் அறியமுடியவில்லை. இவ்விதமாக இந்த பிரம்மத்தை மண்குடம் செய்கின்ற குயவனைப்போல அறிவுடையவனாக, கண்ணிற்குத் தெரிகின்ற உடல் உடையவனைப்போல பாவித்துக் கொள்கிறார்கள். இவர்கள் உடலைக் கொண்ட உருவத்தில் மட்டுமே பாவனை செய்து வழிபாடு செய்கிறார்கள். ஆனால், எல்லா உயிர்களிலும் காணப்படுகின்ற பிரம்மத்தை கவனியாமல், ஜீவ ஹிம்சை செய்து துன்புறுத்துகிறார்கள்.

பிரம்மம் பூரணமானது, முழுசுதந்திரம் உடையது, அது உருவத்திற்குள் அடங்குவது அன்று. அதுமட்டுமல்லாமல் இந்த உலகம் தோன்றுவதற்கு முன்பும், அடங்கிய பின்பும்



பிரம்மம் இருக்கக் கூடியது. இந்த பிரம்மமே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் இவையனைத்தையும் செய்கின்றது. இந்திரியம், புத்தி, மனம், அகங்காரம் இவையாவையும் கொண்ட மனிதன் தன் எண்ணத்திற்கும், அறிவிற்கும் தக்கவாறு அவர்களுக்கு விருப்பமான உருவத்தினை படைத்தது அதுவே பிரம்மம் என்கின்றனர்.

ஆனால், இந்த பிரம்மமானது இவையெல்லாவற்றிற்கும் மேலானது என்பதனை அறிய

மறந்துவிடுகிறான். அதாவது, "கண்ணாடியில் தன் முகத்தை காணும் ஒருவன் அவனது பிரதி பிம்பத்தையே கவனித்துக்கொண்டு கண்ணாடியை கவனிக்காமல் தவற விடுவதைப்போன்று, இந்த மூடர்களும்இந்தஉலகத்தையும்,தான் அபிமானிக்கின்ற உருவத்தையும் மட்டுமே கவனித்துக்கொண்டு பரபிரம்மத்தை அறியாமல் தவற விடுகின்றார்கள்.

பரபிரம்மமானது உருவமற்ற ஏகனாக இருப்பதினால், அந்த பரபிரம்மத்தை சிவன், விஷ்ணு, சக்தி, இந்திரன் என்ற உருவபேதத்தினால் அவர் சிறந்தவர், இவர் சிறந்தவர், அவர் உயர்ந்தவர், இவர் தாழ்ந்தவர் என்றெல்லாம் பேதபுத்தி கொள் பவன் அறிவற்றவன் ஆவான். ஆகையால், ஸ்திரமான மனமுடைய இராஜகுமாரரே! அந்த உருவமற்ற பிரம்மத்தை குறித்து தியானம் மேற் கொள்ளுங்கள்.

அது முடியவில்லை என்றால், எந்த உருவத்தின் மீது மனமானது லயிக்கிறதோ அதன்மீது மட்டுமே பக்திசெய்து, முயற்சியினால் அந்த உருவத்தையே காலப்போக்கில் தியானமாகிக்கொண்டு மேன்மை நிலைக்கு வர முயலவேண்டும். இந்த தியானயோகமாகிய மெய்ஞ் ஞானத்தைத் தவிர கோடி ஜென்மம் எடுத்தாலும் இறைநிலையை அடைய வேறுகதியில்லை என்பதை அறிவீர்களாக, என்று கூறிமுடித்தாள்.

ஸ்ரீ தத்தாத்ரேயசுவாமி, பரசுராமருக்கு கூறிய இதே கருத்தினை பகவான் ஸ்ரீரமண மகரிஷி, கீழ்கண்ட பாடல் வரிகளின் மூலமாக மிகஅழகாக விளக்குகின்றார்.

அறியாமை யான்மறை வானதுபோ
லான்மா
வறவேஃ தேகம தாகி – நிறைவா
யிலகுமே தானா யிரியவே மேக
மிலகுமோ தித்த னென வே.

நம்மிடமுள்ள அஞ்ஞானமாகிய அறியாமையால் ஆன்மாவானது பலவாக காட்சியளிக்கின்றது. அஞ்ஞானம் அழிந்து ஞானஒளி ஒளிரும்போது அது ஒன்றுதான் என்று தெரிந்துவிடும். சூரியனானது எப்போதும் ஒளிவீசி பிரகாசித்துக் கொண்டே தான் இருக்கின்றது, ஆனால் மேகமானது மறைக்கும்போது சூரியன் இல்லை என்று கூறுகின்றோம். மேகமூட்டம் நீங்கும்போது எப்போதும் ஒளிரும் சூரியன் நமக்கு விளங்கி விடுவான். அதுபோல, எப்போதும் எங்கும் பிரகாசித்துக்கொண்டிருக்கும் ஆன்மா அஞ்ஞானத்திரையின் காரணமாக மறைக்கப்படு கின்றது.

அஞ்ஞானம் விலகி ஞானம் ஒளிரும்போது ஆன்மாவானது எப்போதும்போலப் பிரகாசிக் கின்றது. இதன்மூலம் ஞானத் தால் மட்டுமே அஞ்ஞானத்தை போக்கமுடியும், அதைவிட்டு எத்தகைய கர்மங்களை செய் தாலும் அறியாமை விலகுவ தில்லை என்பது பகவானால் மிகத் தெளிவாக எடுத்துரைக்கப் பட்டது.

தொடரும்.

பால் பெருங்காயம்

நாம் உண்ணும் உணவுகளில் இயற்கை மணத்துக்காக சேர்க்கப் படும் முக்கியப் பொருட்களில் ஒன்று பெருங்காயம். இதை சேர்ப்பதால் வயிறு சம்பந்தப்பட்ட உபாதைகள் வராது என்பார்கள். பெருங்காயம், 'ஃபெருலா ஃபொட்டிடா' அல்லது பங்கி என்ற செடியின் வேரிலிருந்து வரும் பிசினில் இருந்து கிடைக்கிறது. இது ஈரான் நாட்டை பிறப்பிடமாகக் கொண்டது.

மேலும், உலகின் பல நாடுகளில் பல்வேறு மருத்துவக் காரணங்களுக்காகவும், பூச்சிக் கொல்லியாகவும் பயன்படுத்தப் படும் பெருங்காயம் உலகில் 40 சதவீதம் இந்தியாவில் மட்டுமே பயன்படுத்தப் படுவதாக கணக்கிடப் பட்டுள்ளது. 'உணவுகளின் கடவுள்' என்று பாரசீக மக்கள் இதனை குறிப்பிட்டுள்ளனர்.

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் பல்வேறு விதமாக பெருங்காயம் சமையலில் சேர்க்கப்படுகிறது. நம் தமிழ்நாடு உணவுகளான சாம்பார், ரசம், மோர் போன்றவற்றில் அவசியம் பெருங்காயம் சேர்க்கப்பட்டு மணக்கும்.

நல்ல, தரமான பெருங்காயத்தை எப்படி தேர்வு செய்வது? வெளிறிய மஞ்சள் பழுப்பு நிறத்தில் இருக்கும் பெருங்காயமே சிறந்தது. கறுப்பாக இருந்தால் தவிர்த்து விடுங்கள். இதிலும் தற்போது சில தாவர பிசின்கள், ஸ்டார்ச் மாவு போன்றவை சேர்க்கப்பட்டு விற்கப்படுகிறது. பெருங்காயத்தின் வகைகளான பால் பெருங்காயம் மற்றும் சிவப்பு பெருங்காயத்தில் பால் பெருங்காயம்தான் அதிக மதிப்புமிக்கது. இதுதான் மிகுந்த வாசனையுடனும், காரத்துடனும் இருக்கும்.

பெருங்காயத்தில் உள்ள ஓலியோ ரெசின் எனும் வேதிப்பொருள் உடலுக்கு நன்மை தரக்கூடியது. காரமும், கசப்பு சுவையும் கொண்ட பெருங்காயத்தின் சுவை நரம்புகளைத் தூண்டி, எளிதில் ஜீராணிக்க செய்து செரிமானத்திற்கு உதவுகிறது.

மேலும், இதில் பல மருத்துவ குணங்கள் இருப்பது ஆராய்ச்சிகள் மூலம் தெரிகிறது. குறிப்பாக, பன்றிக் காய்ச்சலுக்குப் பயன் தரும் அமாண்டடின்/சைமடின வைரஸ் மருந்துகளைப் போல, பெருங்காயமும் வைரஸ் எதிர்ப்புத் தன்மையை கொண்டது எனத் தைவானில் உள்ள ஆய்வாளர்கள் கண்டறிந்தது குறிப்பிடத்தக்கது.

தினமும் ஒரு கிளாஸ் மோரில் துளி பெருங்காயம் போட்டுப் பருகினால், உடல் குளிர்ச்சியுடன் கால்சியமும் கிடைக்கும். லாக்டோ பாசில்லஸ் என்னும் நலம் பயக்கும் நுண்ணுயிரியும் கிடைக்கும். கூடவே, பன்றிக் காய்ச்சல் நுண்ணுயிரி யையும் வர விடாமல் தடுக்கலாம்.



தற்போது கட்டிப்பெருங்காயத்துடன் தூள் பெருங்காயமும் பயன்படுத்த எளிதாகக் கிடைக்கிறது. மற்ற உணவுப் பொருட்களுடன் சேர்த்து சமைக்கும்போது வரும் பெருங்காயத்தின் நறுமணம், அந்த உணவிற்கு ஒரு தனித்துவமான சுவையை அளிக்கிறது எனலாம். எனினும் அளவுக்கு மீறினால் உணவின் சுவை கெட்டு விடும் வாய்ப்பு உள்ளது.

ஆகவே, சுவையும் மணமும் மட்டுமல்ல, நமது உடல் ஆரோக்கியத்தையும் மேம்படுத்த உதவும் இதை அளவுடன் பயன்படுத்தி நலம் பெறுவோம்.

பெருங்காயத்தில் புரதச்சத்து அதிகம் காணப்படுகிறது. மீன் போன்ற அசைவ உணவுகளைச் சாப்பிட்டு புரதத்தைப் பெற முடியாத சைவ உணவுப் பழக்கம் உள்ளவர்கள், தினசரி சமையலில் பெருங்காயத்தைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் அதை ஈடுகட்டலாம்.

சமையலில் பெருங்காயத் தை அதிகம் சேர்த்துக் கொண்டால் அது நரம்புகளையும், மூளையையும் இயல்பாக்கி பாதிப்புகளைத் தடுக்கும்.

பெருங்காயப் பொடியை வெறுமனே வாணலியில் போட்டு வறுத்து, வலி எடுக்கும் சொத்தைப் பல்குழியில் வைத்து கடித்துக் கொண்டால், பல்வலி நொடியில் பறந்துவிடும்.

ஆஸ்துமா தொந்தரவால் மூச்சுவிட முடியாமல் அவதிப் படுகிறவர்கள், பெருங்காயப் பொடியை அனலில் போட்டு, அந்தப் புகையை சுவாசித்தால் மூச்சுத் திணறல் தீரும். வாயுக் கோளாறுக்கு மிகவும் பயன்படு கிறது. மார்புவலி, மூச்சுக்குழல் அழற்சி, கக்குவான் ஆகியவற்றினை போக்க உதவுகிறது, மேலும் உயர் ரத்த அழுத்தத்தினை குறைத்து ரத்தத்தின் அடர்த்தியினை குறைக்கிறது.

இவ்வளவு அற்புதங்கள் நிறைந்த கலப்படம் இல்லாத பால் பெருங்காயம் நமது சாய் தியானாலயா ஆத்மஞான பீடத்தின் சார்பாக தயாரிக்கப்படுகிறது. 50 கிராம் 80 ரூ அனைவரும் வாங்கி பயன்படுத்திக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தேவைக்கு தொடர்பு கொள்ளுங்கள்: 9941816692

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்! ●

“கொஞ்சம் நிறுத்து”

ஒருமுறை பாபா துவாரகாமாயியில் உணவு உண்டு கொண்டிருந்தார். அப்போது பாபாவின் பக்கத்தில் இரண்டு அல்லது மூன்று பக்தர்கள் அமர்ந்திருந்தனர், பாபா உணவு அருந்திக் கொண்டிருந்தபோது, திடீரென்று “கொஞ்சம் நிறுத்து” என்று சத்தமாக கத்தினார்.

பாபா இந்த வார்த்தைகளை யாரிடம் கூறினார் என்று அமர்ந் திருந்த பக்தர்கள் ஆச்சரியப்பட் டனர். பாபா உணவு உண்டபின், அவரது பக்தர்களிடம் அவருடைய உடமைகளான சில்லீம் என்ற புகைக் குழாய், சட்க்கா என்ற கைத்தடி, பாபா தோளில் மட்டும் ஜோல்னா பை மற்றும் தண்ணீர் பானை ஆகியவற்றை துவாரகாமாயீ மண்டபத்தின் தரையில் கொண்டு வந்து வைக்குமாறு கூறினார்.

பின்பு பாபாவும் பக்தர்களும் துவாரகாமாயீ மண்டபத்தின் அறைக்கு இறங்கிவந்தனர்.

அவர்கள் உணவு கூடத்தை விட்டு அகன்ற உடனே, துவாரகா மாயீயின் மேற்கூரை, தரையில் சத்தத்துடன் விழுந்தது. பாபா உணவு உண்ணும் வேளையில் “கொஞ்சம் நிறுத்து” என்று கூறியது ஏன் என்று பக்தர்களுக்குத் தற்போது விளங் கியது. பாபாவின் விருப்பம் இல்லா மல் உயிரற்ற பொருட்கள் கூட அசையாது என்பதை அல்லவா இது காட்டுகிறது.



சீரடி சாயிநாதரின் புகழ் பரப்பும் மாத இதழில் விளம்பரம் செய்து சாயிநாதரின் ஆசியைப் பெற்று உங்களது வியாபாரத்தில் மேன்மேலும் வளர்ச்சியடையுங்கள்.

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே!

உங்களது நிறுவனங்கள், தயாரிப்புகள், மற்றும் உங்கள்



வீட்டு பிறந்தநாள், திருமணநாள், விஷேசங்கள், தொடர்பான விளம்பரங்களை குறைந்த செலவில் வண்ணத்தில் பிரசுரித்து பயனடையுங்கள்.

குறைக்கப்பட்ட கட்டணங்கள்

பின் அட்டை கலர் முழுபக்கம் – ரூ.3000
நடுப்பக்கம் கலர் முழுபக்கம் – ரூ.2000
நடுப்பக்கம் கலர் அரைபக்கம் – ரூ.1000
கறுப்பு/ வெள்ளை முழு பக்கம் – ரூ.1500
கறுப்பு/வெள்ளை அரைபக்கம் – ரூ.750

குறிப்பு: சாயி சொந்தங்களுக்குள் திருமண பந்தத்தில் இணைய விரும்பும் மணமக்களுக்காக "வரன் தேவை" அரை பக்க வண்ண விளம்பரம் ரூ.500 மட்டுமே!

அன்னதான சேவை



அன்னதான சேவையில் நீங்களும் பங்குபெற விரும்பினால்
காணிக்கை அனுப்பி உதவலாம்.

G- PAY NO: **9941816692**

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு. பாலகிருஷ்ணன்.அண்ணாநகர். ரூ.3000.

திருமதி. ஹேமாவதி நமசிவாயம், சாலிகிராமம்.ரூ.2000.

திருமதி. திருமலைச்செல்வி, கொளத்தூர். ரூ.1750.

திருமதி.ராதா கணபதி,வேளச்சேரி. ரூ.1000.

திருமதி. அர்ச்சனா சாய், OMR. ரூ.1008.

திரு. இராஜசேகர், அயனாவரம். ரூ.1000.

திரு. சாய் மகராஜ். சென்னை. ரூ.1000.

திருமதி.ஜெயசாந்தி AYK ரூ.500.

திருமதி. நித்யா ராஜேந்திரன், சென்னை. ரூ.500.
திருமதி.பி.மகாலட்சுமி பொன்முருகன், மதுரை. ரூ.500.
திருமதி. யோகபிரபா, மேடவாக்கம். ரூ.500.
திருமதி. தனலட்சுமி, திருச்சி, ரூ.500.
திரு. பாபு லதா வேப்பம்பட்டு, ரூ.500.
திரு. பாபா மாஸ்டர். பாண்டிச்சேரி.ரூ.500.
திருமதி.நேத்ராலட்சுமி. கோவை.ரூ.500.
திரு. சாந்தமூர்த்தி,போரூர். ரூ.500.
திருமதி. பி.அனிதா, திருப்பூர், ரூ.500.
திருமதி லோகேஸ்வரி கார்த்திக், வாடிப்பட்டி. ரூ.500.
திரு.துளசிராம் – சண்முகப்பிரியா, மதுரை. ரூ.500
திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.
திருமதி. லதா, திருவொற்றியூர். ரூ.300
திருமதி திலகா ஷ்யாம் சுந்தர், சென்னை. ரூ 205.
திரு.கோபால் சாய், விருகம்பாக்கம். ரூ.200.
திருமதி. ஜெயந்தி, மாவுத்தன்பட்டி,ரூ.200.
திருமதி. உமா விஜய்ஆனந், அயனாவரம். ரூ.400.
சாய்னி, போரூர். ரூ.200
திருமதி. பிச்சையம்மாள். பெரம்பூர்.ரூ.200.
திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார். பெரவள்ளூர். ரூ.200.
திரு. பாண்டியன், ஆழ்வார்திருநகர். ரூ.200.
திரு. நிர்மலா, மனேஜர்,சி.சி பேங்க்,
பெரியார் நகர்.ரூ.200.
திரு.குமரன் ஸ்டோர்ஸ் – டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட். கொளத்தூர். ரூ.200.
திருமதி. பிரியா, அயனாவரம். ரூ.200.
திருமதி. வீ.வித்யா நவீன்குமார், பெங்களூர். ரூ.200.
திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர் ரூ.100
திரு. செல்வவிநாயகம், மணலி, ரூ.100
திரு. அகஸ்டின், குன்றத்தூர். அரிசி மூ–1

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும்
அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும்
என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* **1 வருட சந்தா – ரூ.320**
(தபால் செலவு உள்ளட)

* **3 வருட சந்தா – ரூ.850**
(தபால் செலவு உள்ளட)

* **5 வருட சந்தா – ரூ.1,400**
(தபால் செலவு உள்ளட)

* **ஆயுள் சந்தா – ரூ.3,000**
(தபால் செலவு உள்ளட)

V.ஸ்ரீராம், ஆசிரியர்
99418 16692, 88258 31068
'சாயி மகராஜ் குருவை தேடி',
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு,
அயனாவரம், சென்னை – 600023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.


குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068